கும்பகோணம்

மகாமகம் சர்வோதய கதர் கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி

1968.

MAKĀMAKAM CARVŌTAYA KATAR KIRĀMAK KAITTOLIL PORUTKĀTCI (Kumbakonam)

நினைவு மலர்.

NINAIVU MALAR 1968.

CONNEMARA PUBLIC LIBRARY MADRAS
1 MAY 1969

தமிழ்நாடு சர்வோதய சங்கம்,
காந்திநகர், : : திருப்பூர்-3.

141969

தொகுப்பு: வீ. பாலசுப்ரமணியம்.

5(X9B) '2|||7K
31b7K8

NEMARA PUBLIC LIB
11 MAY 19
MADRAS

... PUBLIC ...

பொருட்காட்சி எப்படி அமையவேண்டும்?

11 · 5 · 67

மகாத்மா காந்தி அடிகள்

கிராமங்கள் இருக்கவேண்டும் என்பது மட்டுமல்லாமல் நிலையாகவும், செழிப்புடனும் இருக்க வேண்டும் என நாம் விரும்பினால், நமக்கு நம்பிக்கை இருந்தால், பொருட்காட்சிகளில் கிராமமுறைதான் மிகச்சிறந்த கருத்தாக இருக்க முடியும். இது உண்மையானால், நமது பொருட்காட்சிகளில் நகரங்களின் ஆடம்பரத்திற்கும், பகட்டிற்கும் இடமில்லை. பட்டணத்துப் பாணியில் எவ்வித விளையாட்டுக்களும், மனதிற்குக் குதூகல மூட்டவல்ல நிகழ்ச்சிகளும் இருக்க வேண்டியதில்லை. பொருட்காட்சி ஒரு **"வேடிக்கை"** அரங்கமாக இருக்கக்கூடாது

பொருட்காட்சி பார்ப்போருக்கு அறிவு புகட்டக்கூடியதாகவும், கவர்ச்சிகரமாகவும் அமைய வேண்டும். ஒரு கிராமவாசி அதைப் பார்த்தவுடன் ஏதாவது ஒரு தொழிலைத் துவங்க வேண்டுமென்ற எண்ணத்தை அவனுள்ளத்திலே தூவும் சக்தியுடையதாக அது அமைய வேண்டும். இன்றைய கிராம வாழ்வில் உள்ள மிகப் பெரிய குறைகளையும், கேடுகளையும் அவனுக்கு எடுத்துக் காட்டி, அவைகளை நிவர்த்திசெய்ய என்னென்ன வழிகளைப் பின்பற்ற வேண்டுமென அவனுக்குத் தெளிவு படுத்தக்கூடியதாக அது அமைய வேண்டும்.

கிராம முன்னேற்றம் எனும் கருத்து செயல்பட ஆரம்பித்த நாளிலிருந்து, நாளது வரை அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் துறையில் கிடைத்துள்ள பலன்களைக் காட்டும் வகையில் பொருட்காட்சி அமைய வேண்டும். கிராம வாழ்க்கையைக் கலை நிறைந்ததாக எப்படி அமைப்பது என்பதையும் பொருட்காட்சி கற்பிக்க வேண்டும்.

The Sarvodaya Exhibition……

"My wife and I were very pleased to go round the Sarvodaya Exhibition which has been arranged so excellently. I have no doubt that people in large numbers will visit this show aud greatly benifit from it. I wish the organizers who are selfless workers all success"

—C. G. RANGABHASHYAM, I. A. S.
Collector, Tanjore.

முன்னுரை

தமிழகத்தின் பெரும் விழாக்களில் கும்பகோணத்தில் 12-ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மகாமகம் திருவிழா சிறப்பானதாகும். இவ்விழாவிற்கு வந்துசெல்லும் பல லட்சக் கணக்கான மக்களின் மத்தியில் தமிழகத்தின் நிர்மாண ஸ்தா பனங்களின் மூலம் அமைதியான முறையில் நடைபெற்றுவரும் ஆக்கமிக்கப் பணிகளைச் செய்முறை மூலம் விளக்குவதும், அறிமுகப்படுத்துவதும் அவசியம் எனத் தமிழ்நாடு சர்வோதய சங்கம் கருதியது.

எனவே கும்பகோணத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சர்வோதய சங்க தர்மகர்த்தாக் குழு, கதர் கமிசனின் உதவியுடன் பெரிய அளவில் கண்காட்சி நடத்துவதெனத் தீர்மானித்தது. ஆதலால் தமிழ்நாடு சர்வோதய சங்கத் தலைவர் திரு. கோ. வேங்கடாசலபதி அவர்களைத் தலைவராகவும், ஷெ சங்க பொருளாளர் திரு. A. பாலகிருஷ்ணம் பிள்ளை அவர்களைப் பொக்கிஷதாரராகவும், திரு. மு. நடராஜன் அவர்களைக் கன்வீன ராகவும் கொண்ட தனியான தொரு செயற்குழுவிடம் கண் காட்சிப் பணிகளை ஒப்படைத்தது. குறுகிய அவகாசமே இருந்த பொழுதிலும் செயற்குழு சிறப்பான முறையில் கண்காட்சியை நடத்திக்கொடுத்தமை பாராட்டுதலுக்குரியது.

கண்காட்சிப் பணிகளுக்கான பொருளுதவி நல்கிய கதர் கிராமக்கைத்தொழில் கமிசனுக்கும், கண்காட்சிக்கான அனைத்து உதவிகளையும்செய்து உதவிய கும்பகோணம் நகராட்சி, டவுன் உயர்நிலைப்பள்ளி ஆகிய ஸ்தாபனங்களுக்கும், கண்காட்சியைத் திறந்து வைத்த மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்கும், நிறைவு விழா விற்கு வருகைதந்து தலைமை வகித்து, நடத்திக் கொடுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு **C. G.** ரெங்கபாஷ்யம் அவர் களுக்கும், அல்லும் பகலும் அயராது உழைத்த சக ஊழியர் களுக்கும், நண்பர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்புத்தகம் கண்காட்சியின் பல்வேறு அம்சங்களை விளக்குவதுடன் அல்லாமல், அந்தந்தக் கைத்தொழில்களின் அடிப்படை அம்சங்களையும் நிலைகளையும் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் அடிப்படையில் வெளியிடப் படுவதால் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமெனக் கருதுகிறோம்.

K. S. நடராஜன்,
செயலாளர்.

...MARA PUBLIC LIBRA...
10 MAY 1969

வளர்க சர்வோதயம்! வாழ்க வையகம்!!

" அசத்தியத் திலிருந்து சத்தியத்திற்கு
இருளிலிருந்து ஒளிக்கு
இறப்பிலிருந்து அமரத்துவத்திற்கு
கருணை மிகு ஒளியே
எம்மை அழைத்துச் செல்வாயே "

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஒரு கண்ணோட்டம் (கன்வீனர்)	1
2.	கிராமங்களில் தொழில்வளம் பெருகவேண்டும். —C. G. ரெங்கபாஷ்யம்.	4
3.	வறுமைக்குக் காரணமானது எது? —திரு. வெ. ராமச்சந்திரன்.	6
4.	கண்காட்சிக் கலையரங்கம் —அமைப்பு	13
5.	நிகழ்ச்சி நிரல் —விபரம்	18
6.	உண்மைக் குடியரசு —தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்	24
7.	கைக்குத்தல் அரிசிப்பகுதி	31
8.	மண்பாண்டத் தொழில் அரங்கம்	37
9.	தேனீ வளர்ப்பு அரங்கம்	44
10.	கைக்காகித அரங்கம்	48
11.	கதர் அரங்கம்	53
12.	வளர்ச்சிப் பாதையில் அம்பர் இராட்டை	56
13.	கதர் நெசவு அரங்கம்	59
14.	கதர்க் குடும்பம்	62
15.	உண்ணு எண்ணெயும் சோப்புத் தொழிலும்	63
16.	பாய் நெசவு அரங்கம்	67
17.	நார்த்தொழில் அரங்கம்	69
18.	கண்கவரும் கைவண்ண நெட்டித் தொழில் அரங்கம்	72
19.	பணிமனை அரங்கம்	74
20.	தொழுநோய்த் தடுப்பு அரங்கம்	75
21.	சர்வோதய இலக்கிய விற்பனை அரங்கம்	77
22.	மாதிரி கிராமக் குடிசை	79
23.	முப்பெரும் சத்தியாக்கிரக அரங்கம்	83
24.	காந்தி அடிகளின் குறள்வழி வாழ்க்கை மண்டபம்	85
25.	பெங்களூர் காதி பவன்	88
26.	சர்வோதயப் பாத்திரம்	90
27.	மக்கள் மதிப்பீட்டிற் சில	93

CONNEMARA PUBLIC LIBRARY
10 MAY 1969

CONNEMARA PUBLIC LIBRARY
1 MAY 1969

பொருட்காட்சியின் திறந்த வெளிக்கலையரங்கம்.

கும்பகோணம்

மகாமகம் திருவிழா!

ஒரு கண்ணோட்டம் :

வான வெளியில் சஞ்சரித்து வரும் எண்ணிறந்த கோள் களுள் பூமியும் ஒன்று. மனித இனம் பூமியில் வசித்து வந்தாலும் கூட தனது அண்டையில் உள்ள கிரகங்களின் போக்கு, சுழற்சி, முதலியவைகளை அநுசரித்தே இரவும், பகலும், காற்றும் மழையும், குளிரும் வெப்பமும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன.

எப்படித் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ளப் பூமிக்கு 24-மணி நேரமும், சந்திரனுக்கு 1-மாதமும் பிடிக்கின்றனவோ, அதுபோல வியாழன் என்னும் கிரகத்திற்கு 12 ஆண்டுகள் ஆகின்றன.

பூமியின் சுழற்சியின் ஆதாரத்தில் மனிதர்களின் அன்றாட வேலைத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது போல சந்திரன், மற்றும் நட்சத்திரங்களின் சுழற்சியினை ஆதாரமாகக் கொண்டு மாதாந்திர நிகழ்ச்சிகளும், பூமி சூரியனைச் சுற்றிவரும் ஆதாரத்தில் வருடத்தின் வேலைத் திட்டங்களும் அமைந்துள்ளன. அதுபோலவே பல்லாண்டுத் திட்டங்களை 'வியாழன்' என்னும் கிரகத்தின் சுழற்சியினை ஆதாரமாகக் கொண்டு அமைத்துக் கொண்டுள்ளனர்.

இந்த அடிப்படை அமைப்பின் ஆதாரத்தில்தான் **'மகாமகம்'** என்னும் விழா கொண்டாடப்படுகிறது. வருடா வருடம் மாசி மாதம் 'மகம்' என்னும் நட்சத்திரத்தில் விழா கொண்டாடப்பட்டபோதிலும் வியாழ வட்டத்தின் அடிப்படையில் வரக்கூடிய மகம் திருநாள் **''மகாமகமாக''**க் கொண்டாடப்படுகிறது.

இதுபோலவே 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வட இந்தியாவில் பிரயாகை, அரித்துவாரம், நாசிக், உஜ்ஜெய்னி

போன்ற இடங்களிலும் சுமார் 1300 ஆண்டுகளாகவே கும்ப மேளா (நவராத்திரி தினத்தில்) பாரம்பரியமாகக் கொண்டாடப் பட்டு வருவதற்கான ஆதாரங்கள் சரித்திர வாயிலாகக் காணக் கிடைக்கின்றன.

எனவே அவ்வாருனதொரு புனித விழாத்தான் தமிழகத் தின் குடந்தை மாநகரில் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற 1956-ம் ஆண்டு கொண்டாடப்பட்டதை அடுத்து 1968 பிப்ரவரி மாதம் 14-ம் தேதி காலை $11\frac{1}{2}$ மணிக்கு மீண்டும் சிம்ம ராசியில் வியாழன் நுழைந்து இயங்குவதால் இப்புனித காலத் தில் இங்குள்ள மகாமகக் குளத்தில் புனித நீராடி இறைவனை வழிபட்டால் நம்முடைய பாவங்கள் நீங்கி இம்மையும் மறுமை யும் இன்பம் துய்ப்பர் என்ற முறையிலும் ஆன்ம திருப்தி அடையலாம் என்ற நம்பிக்கையிலும் ஏராளமான பக்தர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வருகை தருகிருர்கள்.

15 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த மகாமகக் குளத்தில் புனித நீராடியவர்களின் எண்ணிக்கை சுமார் 20 லட்சத்திற்கும் அதிகம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே அந்தச் சந்தர்ப்பத்தை ஒட்டி விழாவிற்கு வரும் பக்தர்களின் மனதில் காந்தியக் கருத்துக்களையும், சர்வோதய, பூமிதான இயக்கங்களையும் வித்தூன்றும் நோக்கத்தில் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருட்காட்சியை அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கமிசனின் பொருளாதார உதவி யுடன் தமிழ்நாடு சர்வோதய சங்கம் ஏற்பாடு செய்தது.

ரூ. 60,000 செலவில் நடாத்தப்பட்ட இந்தக் கண் காட்சியினை நடத்தும் பொறுப்பை கீழ்க்கண்ட அங்கத்தினர் களிடம் தமிழ்நாடு சர்வோதய சங்கம் ஒப்படைத்தது.

தலைவர்:	திரு. கோ. வெங்கடாசலபதி	அவர்கள்,
பொருளாளர்:	திரு. அ. பாலகிருஷ்ணன்	,,
கன்வீனர் :	திரு. மு. நடராசன்	,,
அங்கத்தினர்கள்:	திரு. வெ. ராமச்சந்திரன்	,,
	திரு. மு. சுயம்பிரகாசம்	,,
	திரு. வி. வெங்கட்டராமன்	,,
	திரு. என். ராமஸ்வாமி	,,
	திரு. A. V. வெங்கட்ராமன்	,,

பொருட்காட்சியின் பல்வேறு அம்சங்கள், அதன் பிரிவுகளின் அமைப்பு, இயக்கம், முதலியவைகளைப் பற்றிய விபரங்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளன.

கண்காட்சி நடத்துவதற்கு இடமளித்து அனுமதி தந்து ஒத்துழைப்பு நல்கிய கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளி நிர்வாகஸ்தர்களுக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிபுரிந்த பெரியோர்களுக்கும், நண்பர்களுக்கும் குறிப்பாக டாக்டர் மகாலிங்கம் அவர்களுக்கும் திரு. சம்பத், திரு. சோமசுந்தரம் ஆகியோர்களுக்கும், நமது மாவட்ட ஆட்சித்தலைவர், துணை ஆட்சித் தலைவர், மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களுக்கும், பாதுகாப்பு நல்கிய காவல் துறையினருக்கும், மற்றும் இதர வசதிகள்செய்து தந்த பல்வேறு நண்பர்களுக்கும், நிறுவனங்களுக்கும், நமது உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அ. பாலகிருஷ்ணன்,
பொருளாளர்.

மு. நடராசன்
கன்வீனர்.

இடம்: கும்பகோணம்.

தேதி: 18—2—1968.

கிராமங்களில் தொழில் வளம் பெருக வேண்டும்.

C. G. ரெங்க பாஷ்யம்,
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சை.

நமது நாட்டின் பெரும்பகுதி கிராமங்களில் அமைந்திருக்கிறது. கிராமங்களில் தொழில் வளம் பெருகினுல்தான் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும், வாங்கும் சக்தியினையும்விடக் கிராமங்களின் வாழ்க்கைத் தரம் குறைவாக இருப்பதற்குக் காரணம் தொழில் வளக் குறைவுதான் என்பதைக் காண்கிருேம். நகர மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து அளித்து வரும் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். எனவே கிராமங்களில் தொழில் வளம் பெருகினுல்தான் நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினைவிட கிராமங்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆதலால் செயல்முறையில் அதனைச் செய்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

விடாமுயற்சி தேவை:

அதற்கு விடாமுயற்சி அதிகம் தேவை. ஆதலால் மனம் தளராமல் நாம் முயற்சி செய்து நமது கிராமத் தொழில்களை முன்னேற்றி அதன்மூலம் கிராமமும், நகரமும், நாடும் நலம்பெற முயல வேண்டும் என்று முயற்சியுடன் பாடுபடுவோம். இம் மாதிரியான காரியங்களுக்கு முழுமனதுடன் ஆதரவு கொடுக்க விரும்புவதாக இப்பொழுது இருக்கும் சர்க்கார்கூட கூறி இருக்கிருர்கள். எனவே நாம் நமது முயற்சியினின்றும் பின் வாங்காமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து கிராமத் தொழில்கள் முன்னேறத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய முன் வர வேண்டும்.

கிராமங்களே உயிர்நாடி :

கிராமங்களின் வறுமையைப் போக்கினுல்தான் நமது நாடு செழிப்பாகத் திகழ முடியும். நமது நாட்டில் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பு அம்சங்கள் பலவற்றை செயல் முறையில் எடுத்துக் காட்டுதலே பயனுள்ள காரியமாக இருக்க முடியும்.

பொருட்காட்சி :

அம்மாதிரியான எடுத்துக் காட்டிற்கு இலக்கணமாகவே இம் மகாமகப் பொருட்காட்சி அமைந்துள்ளது. வேலை வாய்ப்புப் பெற விரும்புபவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான இப்பொருட்காட்சியை ஏற்பாடு செய்த சர்வோதய சங்க நண்பர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விளம்பரம் வேண்டும் :

இந்த சர்வோதயப் பொருட்காட்சியில் சிறப்பானதும், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொள்ளக் கூடியதுமான பல அம்சங்கள் பொருந்தி இருந்த போதிலும்கூட பொருட்காட்சியைக் காணவரும் மக்களின் கூட்டம் குறைவாகவே இருப்பதைக் காண்கிருேம். நமது நாட்டில் ஏராளமான நல்ல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. என்ருலும் போதுமான விளம்பரம் இல்லாத காரணத்தால் இம்மாதிரியான நல்ல காரியங்களைப் பலர் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே விளம்பரத்தின் மகத்துவத்தைப்பற்றி நாம் இன்னும் ஏராளம் தெரிந்துகொள்ள வேண்டியது இருக்கிறது என்றே கருதுகிறேன். எனவே நமது காரியங்கள் நடைபெறும் அளவிற்கு அதனைப்பற்றிய விளம்பரத்தையும் அதிகரித்து அனைவரும் தெரிந்துகொண்டு பயனுறவும் முயற்சிகள் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. எனவே இப் பயனுள்ள பணியில் நம்மை முழு மனதுடன் ஈடுபடுத்தி பலன் துய்க்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

(பொருட்காட்சி நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்கிய மாவட்ட ஆட்சித் தலைவரின் நிறைவு விழா சொற்பொழிவிலிருந்து...)

வறுமைக்குக் காரணமானது எது?

(திரு. வெ. ராமச்சந்திரன், செயலாளர், பாரதீய காதி கிராமோத்யோக் சங்கம்)

நமது நாட்டு மக்களின் வறுமை; வறுமைக்குக் காரணமான வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை நிலவிய பொழுதிலும்கூட ஒரு விசயத்தை நாம் மறந்து விடுகிறோம் அதாவது......

உலகில் மிகப்பெரும் ஜனத்தொகையைக் கொண்டுள்ள நமது நாட்டிலும் மக்கள் வாழ்கிறார்கள் என்றால் எப்படி வாழ் கிறார்கள்? உழைத்து வாழ்கிறார்கள். அவர்களது உழைப்பிற்கு ஆதாரமான சிறுசிறு தொழில்களைச்செய்து வாழ்கிறார்கள். இத் தொழில்களுக்கெல்லாம் வாழ்வு இருக்குமானல் இந்த நாட்டு மக்களுக்கும் வாழ்வு இருக்கும் என்பதைக் காந்தியடிகள் கண்டார்கள். இந்த மக்கள் அதை உணரும்படியாகச் செய் தார்கள். அவர்கள் சிறுசிறு தொழில்களாக அமைந்தாலும்கூட இதன்மூலம்தான் இந்த நாட்டின் பெரும் மக்கட் தொகைக்கு ஒரு வழி ஏற்படும் என்ற உணர்வோடு கூடப்பணியாற்றினர்கள் இந்தத் தொழில்களுக்கெல்லாம் புத்துயிர் அளித்தார்கள். இன்று இந்த தொழில்கள் எல்லாம் பிற்பட்டது; இதன்மூலம் பயன்பெற முடியாது என்ற எண்ணம் அங்குமிங்கும் தோன்றுகிறது. தொழில் நுட்பங்கள் (**Technology**) பெருகுகின்றன. ஆனல் அந்த நுட்பத்தோடுகூட வறுமையும் பெருகுகிறது. அந்த வறுமைக்குக் காரணமானது எது என்பதை மறந்துவிட்டு நமது கலாச்சாரங்களுக்கு ஆணிவேராக இருக்கின்ற தொழில் மயமான தொரு வாழ்க்கைமுறை சீர்குலைந்து போகிறது என்பதை நினை வூட்டுவதற்காகவே இந்தக் கண்காட்சியை இங்குமங்கும் இந்த நாட்டிலே பெரும் மக்கள் தொகை திரண்டு சேரக்கூடிய இடத் தில் நடத்துகிறார்கள். எனவே இந்த மாமாங்கத்தை ஒட்டி ஏற் பாடு செய்வதற்கு இந்தச் சங்கம் முற்பட்டது.

இளைஞர்களைக் கவருமா?

அது நல்ல பயனளிக்குமா? இப்பொழுது இருக்கக்கூடிய இளைஞர்களுக்குத் திருப்தி அளிக்க முடியுமா? என்பது வேறு விசயம். இளைஞர்களுக்கு எதிலுமே திருப்தி கிடைக்க முடியாது ஏனென்றால் அவர்கள் திருப்தியடைந்து விட்டார்கள் என்றால் அவர்கள் இளைஞர்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் வயது முதிர்ந்த பிறகுதான் அவர்களுக்கு மன நிறைவு ஏற்பட முடியும் மன நிறைவு இல்லா ஒரு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பது தான் இளைஞர்களாக இருக்கிறார்கள் என்பதற்கு அறிகுறி. ஆகையால் அவர்கள் எல்லோரும் இதனைக்கண்டவுடனேயே திருப்தியடைந்து விடுவார்கள் என்று நம்பவில்லை.

ஆனால் இவர்கள் நாளைக்கு இந்த நாட்டினுடைய மக்களாக இந்த நாட்டின் எதிர்காலத்தை வளர்க்கின்ற மக்களாக ஆகப்போகின்றார்கள். அன்று இந்தப் பிரச்னைகளைத்தீர்ப்பதற்கு அவர்கள் இந்த வழியில்தான் சிந்தனை செய்யவேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை நினைவூட்டுவதற்காக அது பயன்படுமேயானால் அதுவே இந்த நாட்டிற்கு நாம் செய்த தொண்டாக அமைய முடியும்.

அறிவுகலந்த ஆற்றல் :

இந்த நாட்டின் பெரும் மக்கட் தொகையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது சிறு சிறு தொழில்களாக இருந்தபோதிலும்கூட சிறிது நம்முடைய அறிவு, ஆற்றல் இரண்டையும் இதோடு கலந்து விட்டோம் என்று சொன்னால் இதில்கூட எவ்வளவு பெரிய ஒரு மாறுதல், முன்னேற்றம் அடைய முடியும்? என்பதையும் இந்தக் காட்சியிலே சில பகுதிகளை நீங்கள் பார்வையிட்டால் தெரிந்து கொள்வீர்கள்.

தொழில்துறை நுணுக்கம் :

கைக்குத்தல் அரிசி என்று சொல்லுவார்கள். 10 மூட்டை அரிசியை 2-நபர்கள் 1-நாளில் தயார் செய்யலாம். இது சாதாரணமாக உரல், உலக்கை போன்றவைகளின் மூலமாக என்று எண்ணுதீர்கள். சில நுணுக்கங்கள் புகுத்திய சிறு கருவிகள், அதன் முன்னேற்றம் காரணமாக ஒரு மூட்டை குத்துவதே கஷ்டமாக இருக்கக் கூடியவர்கள் 10-மூட்டை ஒரு

நாளிலேயே தயாரிக்கலாம் என்ற அளவுக்கு அந்தக் கருவிகள் முன்னேற்றம் அடைந்துள்ளன.

அதிக ஆற்றலின் தீமைகள் :

இதைவிட அதிகமான ஆற்றல் படைத்த இயந்திரங்கள் உண்டு. இல்லாமல் இல்லை. ஆனால் அதுமாதிரி 10-மடங்கு 100-மடங்கு அதிக ஆற்றல் படைத்த சாதனங்களை நாம் பயன் படுத்துவோம் என்று சொன்னால் 100-மடங்கு நம்முடைய வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரிக்கும். அதுபோன்று அப்பெரும் தொழில்களைக் காப்பதற்கான, (**Improstructure**) கொண்டு வருவது, கொண்டு போவது போன்றவைகளில் ஏற் படும் சிக்கல் இருக்கின்றனவே இந்த நாட்டினால் அதை இன்று சமாளிக்க முடியாத அளவுக்கு பெருகக்கூடிய வாய்ப்பு இருப்பதி னாலேயே இன்னும் சில நாட்களுக்காகிலும் சிறுகச் சிறுகத்தான் நாம் முன்னேற முடியும் என்பதைக் காட்டுவதற்காகவே இம் மாதிரியான சிறு சிறு நுணுக்கங்களை படிப்படியாகப் புகுத்தி எல்லோருடைய வாழ்க்கையிலும் பயன்படும்படியான முறை யிலே அவர்களுக்கு தொழில் நுட்பம் வேண்டும்; ஆனால் வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகிவிடக் கூடாது என்ற அளவிலே இந்த தொழில்கள் எல்லாம் நடைபெற்று வருகின்றன.

நாட்டிற்கேற்ற தொழில் நுட்பம் :

இந்த நாட்டிலே இருக்கக் கூடிய கிராமங்களில் நடை பெறக்கூடிய சிறு சிறு தொழில்கள் அதன் மூலமாகத்தான் இன்று கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். நம் நாட்டின் பட்டணங்களில் வாழக்கூடிய 10 கோடி மக்கள் போக 40 கோடி மக்களுக்கும் அதாவது ரஷ்யா உட்பட ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இருக்கக்கூடிய பெரும் மக்கட் தொகைக்குச் சமமான மக்கள் வாழக்கூடிய ஒரு பெரும் பூகண்டம் இதில் வாழக்கூடிய எல்லோருக்கும் தொழில் வாய்ப்பு அளிப்பது, அதற்கு தொழில் நுட்பம் கொடுப்பது, அதற்குண் டான மூலதனம் சேகரிப்பது இயலாத காரியம். யோசித்துப் பாருங்கள்.

ஆகவே இதை நினைவுபடுத்த வேண்டும். நமது சக்திக்கு ஆற்றலுக்கு உட்பட்ட சில நுணுக்கங்களை அதிகரித்து அவர் களுடைய வாழ்க்கை உயர்வதற்கு அவர்களது ஆற்றலுக்கு

உட்பட்ட முயற்சிகள் பெருக வேண்டும் என்ற எண்ணத்தோடு கூட இம்மாதிரியான தொழில்களைச் செய்கிறோம். இதற்குத் தூண்டுதலாக இருக்கக்கூடிய காரியங்களைத்தான் செய்யும்படி காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார். எனவே அதன் முற்போக்குப் பாதைக்கு வழிவகுத்துக் கொடுக்க முனைவது நம் அனைவரின் கடமையாக உணர வேண்டிய அவசியம் ஏற்பட்டு வருகிறது. இதனைத்தான் காந்தியடிகள் நிலைநாட்ட முழுமனதுடன் முயன்றார். எனவே நாம் புது முயற்சியின்மூலம் நிறைவேற்ற முயலுவோம்.

(பொருட்காட்சித் துவக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து......)

தெ. பொ. மீனுட்சி சுந்தரன்,

துணைவேந்தர்.

இந்தியா இருபதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் உலகுக்கு இன்றியமையாத கருத்துக்களைப் புது வடிவில் படைத்துப் பயன்படும் வகையில் தந்துதவும் ஆற்றல் பெற்றிருக்கின்றது என்பது சர்வோதய இயக்கத்தால் விளங்குகிறது. குவியல் முறை நீங்கிச் சமுதாய அமைப்பிலும், அரசியலமைப்பிலும் பொருளாதார அமைப்பிலும் பரவல் முறை வருவதால் 'சர்வோதயம்' பெரிய புரட்சியை உண்டு பண்ணும் என்ற கருத்தே சிற்றூர்களின் மறு மலர்ச்சி இயக்கத்தின் அடிப்படையாகும் இதனை நம் நாடு முழுவதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. புரட்சிமுதலில் மனதில் உண்டாக வேண்டும். பேசிப்பயனில்லை. எல்லோரும் இந்த உண்மையைக் காண வழி செய்யவேண்டும். சர்வோதயக்கண்காட்சி கற்ருேருக்கும் கல்லாதாருக்கும் பயன்படும். மகாமகம் போன்ற திருவிழாக்களில் நூருயிரம் நூருயிரமாக மக்கள் திரள்வார்கள். அங்கே இக்காட்சிப் பெரியபயனைத்தரும் என்பதில் ஐயம் இல்லை.

ஒப்பம்:

தேதி 7—2—68	**தெ. பொ. மீனுட்சி சுந்தரன்,** துணை வேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம், **மதுரை.**

திரு. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், பொருட்காட்சியை குத்துவிளக்கேற்றித் துவக்கும் காட்சி

கண்காட்சிக் கலையரங்கம்!

மகாமகத்தை முன்னிட்டு சென்ற தடவையைப்போல் இம்முறையும் சர்வோதய கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி, காதி கமிஷன் உதவி மூலம், தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் பெருமுயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது.

1968 ஜனவரி 13-ம் தேதி சங்கத்தின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்து 15—1—'68 முதல் வேலைகள் துவங்கி, பிப்ரவரி மாதம் 5-ம் தேதி பொருட்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்த குறுகிய கால அளவில் பொருட்காட்சியை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தால் பெருமளவு முயன்றும் சில ஸ்தாபனங்கள் அதில் பங்குகொள்ள இயலவில்லை. பொருட்காட்சியில் கீழ்கண்டவாறு ஸ்டால்கள் இடம்பெற்றன.

1	அலுவலகம்	...	3	ஸ்டால்கள்
2	மின்விசை அமைப்பு	...	2	,,
3	சிதம்பரம் நடராஜர் கோவில்	...	1	,,
4	காட்சிப்பொருட்கள்	...	51	,,
5	கண் காட்சியும், விற்பனையும்	...	17	,,
6	விற்பனை மட்டும்	...	24	,,
7	விளம்பரத்திற்காக	...	27	,,
8	கலா மண்டபம்	...	1	,,
9	இதர ஸ்டால்கள்		6	,,
	ஆக மொத்தம் பங்குபெற்ற ஸ்டால்கள்	...	132	

பொருட்காட்சியில் பங்குகொண்ட நிறுவனங்கள் வருமாறு:

கதர் அரங்கங்கள் :

		ஸ்டால்கள்
1	தமிழ்நாடு சர்வோதய சங்கம் கதர்விற்பனை	8
2	காதி பவன், பெங்களூர் ,,	4
		12

கைவினைப் பொருள் அரங்கங்கள் :

1	சர்வோதய சங்கம், திருச்சி, பாய் நெசவு	3
2	தஞ்சாவூர் சர்வோதய சங்கம், சோப்புசெய்தல்	2
3	காந்திநிகேதன், டி. கல்லுப்பட்டி தேன், கைகாகிதம்	5
4	தமிழ்நாடு சர்வோதய சங்கம் ஒரத்தூர் மண்பாண்டம்	3
5	,, ,, ,, ஒரத்தூர் கைக்குத்தல்	3
6	கேரளா சர்வோதய சங்கம் திருச்சூர், வாழைநார் நெசவு	2
7	கும்பகோணம்-திருப்பனந்தாள் நெட்டி வேலைகள்	1
8	திருப்பனங்காடு (வடாற்காடு மாவட்டம் ,,	1
9	கோவைமத்திய (தமிழ்நாடு) சர்வோதய சங்கம் ஊத்துக்குளி டிசைன்நெசவு	2
10	வடாற்காடு சர்வோதய சங்கம், திருப்பத்தூர் கம்பளிநெசவு	2
11	தஞ்சாவூர் சர்வோதய சங்கம், அஹிம்சா பட்டுநெசவு	3
12	,, ,, ,, பட்டு, சாயம்	3
13	,, ,, ,, பட்டுதயாரித்தல்	4
14	கடலூர் மண் பதுமை வேலைகள்	1

15 அம்பா சமுத்திரம் மரப்பொம்மைகள் 1

16 கும்பகோணம் பாத்திமா பிரம்பு வேலைகள் 1

கழுகுமலை வட்டார சர்வோதய சங்கம், காலாங்கரைபட்டி தீப்பெட்டி விற்பனை 1

சென்னை கண்ணாடி பொம்மைகள் 1

39

இலக்கிய விற்பனை அரங்கங்கள்:

1 தஞ்சாவூர் சர்வோதயப் பிரசுராலயம்-ஸ்டால் 2

2 கதர் கிராமக்கைத்தொழில் வித்தியாலயம், வீரபாண்டி, திருப்பூர்-ஸ்டால் 2

4

செய்கலை விளக்க அரங்கங்கள் :

1 தமிழ்நாடு சர்வோதய சங்கம், திருப்பூர் சாய, அச்சு இலாகா 3

2 காதி வித்தியாலயம், வீரபாண்டி, திருந்திய முறை பஞ்சுஉடைத்தல் பகுதி 8

3 கோவை ஜில்லா ஆவரம்பாளையம் 1965-ஆம் மாடல் அம்பர் நூற்பு பகுதி 16

கும்பகோணம் தூய இருதய ஆண்டவர் மருத்துவ மனை குஷ்டரோக நிவாரணம் விளக்கம் 1

,, முதல் உதவி 1

29

பிரச்சாரப் பகுதி

காந்தி அடிகளின் குறள் வழி வாழ்க்கை மண்டபம்		16	
காந்தியடிகளின் முப்பெரும் சத்தியாக்கிரக விளக்கம்	...	8	
		24	

கதர் விற்பனை :-

1	தமிழ்நாடு சர்வோதய சங்கம்	6268 60			
	பெங்களூர் காதி பவன்	647 93			
				6,916	53
2	மண்பாண்டம்		...	595	40
3	தேன்		...	747	49
4	கைக்காதிதம், தோல்சாமான்கள்		...	803	68
5	பாய் விற்பனை		...	458	89
6	வாழைநார் தயாரிப்பு		...	697	93
7	சோப்பு		...	1,595	78
8	இங்க், பல்பொடி		...	296	15
9	மரச்சாமான்கள்		...	454	08
10	பர்னிச்சர்		...	941	10
11	கண்ணாடி பொம்மைகள்		...	182	40
12	தீப்பெட்டி		...	415	20
13	நெட்டி வேலை		...	95	45
14	பிரசுரங்கள்		...	832	25
15	மண் பதுமைகள்		...	604	48

16	காலணிகள்	...	3,117 63
17	பிரம்பு சாமான்கள்	...	185 60
18	கரும்புச்சாறு	...	288-75
19	கடலை	...	752 50
			19,976 24

பொருட்காட்சியில் பங்கு கொண்ட ஊழியர்களின் பொது விபரம்.

1	பொருட்காட்சியில் வேலை செய்த ஊழியர்கள் எண்	41
2	,, ,, ,, இதர தொழிலாளர்கள்	48
3	,, ,, ,, அம்பர் நூற்போர்கள்	25
4	,, ,, ,, இதர ஊழியர்கள்- (கலைஞர், டெக்கரேஷன், ஸ்டால்கள் விளக்கும் பகுதியினர்கள்)	35
5	பங்கு கொண்ட இதர ஸ்தாபன ஊழியர்கள்	20
	ஆக மொத்தம்	169

5-2-68 முதல் 18-2-68 முடிய நடைபெற்ற பொருட் காட்சியின் நன்கொடை வசூலும், வருகை தந்த பொதுமக்களும்

ஆரம்ப நாளான 5-2-68-ந் தேதி பார்த்த பொதுமக்களின் எண்ணிக்கை சுமார் 12,880

18-2-68-ந் தேதி நிறைவு நாளில் நன்கொடை டிக்கட் வசூல் இல்லாமல் பார்த்தவர்கள் சுமார்	20,000
6-2-68 முதல் 17-2-68 தேதி முடிய 13 நாட்களிலும் நன்கொடை டிக்கட் மூலம் (ரூ. 0—20) பார்த்த பொதுமக்களின் எண்ணிக்கை.	42,120
மொத்தம் கண்காட்சியை கண்டு களித்தவர்கள் எண்	75,000
6-2-68 முதல் 17-2-68 முடிய நன்கொடை டிக்கட் மூலம் வசூலான மொத்த தொகை	ரூ. 6,318—20

தேதி :
18-2-1968

கன்வீனர்,
மகாமகம் சர்வோதய பொருட்காட்சி,
கும்பகோணம்.

தமிழ்நாடு சர்வோதய சங்கம்,

மகாமகம் சர்வோதய பொருட்காட்சி

கும்பகோணம்.

(5—2—'68 முதல் 18—2—'68 முடிய)
நிகழ்ச்சிகள் விபரம்.

5—2—68 திங்கட்கிழமை

பொருட்காட்சி ஆரம்ப விழா!

தலைவர் :

டாக்டர் திரு. ஆர். மகாலிங்கம் அவர்கள்,

துவக்கி வைத்தவர் :

பன்மொழிப் புலவர்: **திரு. தெ.பொ. மீனுட்சிசுந்தரனுர்** அவர்கள்,
(துணைவேந்தர், பல்கலைக் கழகம், மதுரை.)

வரவேற்புரை :

திரு. வெ. இராமச்சந்திரன் அவர்கள்,
(த. நா. ச. சங்கம்.

பேச்சாளர்கள் : (ஸ்டால் அறிமுகம்)

திரு. சி. வி. பிரபாகரன் அவர்கள், ,,
,, **மு. நடராஜன்** அவர்கள், கன்வீனர், ,,

நன்றி நவிலல் :

திரு. ஏ. பாலகிருஷ்ணன் அவர்கள்,
பொக்கிஷதார், ,,

6—2—68 செவ்வாய்க்கிழமை

ஸ்ரீ மங்களகான சபாவினரின்
"ருக்மாங்கதா" — பொம்மலாட்டம் கலைநிகழ்ச்சி.

மத்திய அரசாங்கச் செய்தித்துறையினரின்
"செய்திப் படங்கள்".

7—2—68 புதன்கிழமை

வீரபாண்டி வித்யாலய ஆசிரியர் திரு. வி. வேதமுத்து.
அவர்கள் & மாணவர்கள் குழுவினரால்
"காந்தி மகான் சரிதம்" — வில்லுப்பாட்டு.

ஸ்ரீ மங்களகான சபாவினரின்
"சீதா கல்யாணம்" — பொம்மலாட்டம்.

மத்திய அரசாங்கச் செய்தித்துறையினரின்
"சினிமாச் செய்திப் படங்கள்".

8—2—68 வியாழக்கிழமை

ஸ்ரீ மங்களகான சபாவினரால்
"வள்ளி திருமணம்" — பொம்மலாட்டம்.
மத்திய அரசாங்கச் செய்தித்துரையினரின்
"செய்திப் படங்கள்"

9—2—68 வெள்ளிக்கிழமை

திரு. வீ. பாலசுப்ரமணியம் & திரு. எம். வேலுசாமி
ஆகியோரால் - பொருட்காட்சி சம்பந்தமான உரையாடல்
மத்திய அரசாங்கச் செய்தித்துரையினரால்
"செய்திப் படங்கள்"

10—2—68 சனிக்கிழமை

இன்னிசைக் கச்சேரி
திரு. டி, என்: சங்கரநாதன் — பாட்டு
திரு. திருமாந்துரை, திரு. சக்கரபாணி — பிடில்
திரு. ஜி. செல்லையா — மிருதங்கம்
திரு. சிங்காரம்பிள்ளை — கஞ்சிரா
மத்திய அரசாங்கச் செய்தித்துரையினரால்
"சினிமாச் செய்திப்படம்"

11—2—68 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீ மங்களகான சபையாரால்
"பிரகலாதா" — பொம்மலாட்டம்.
மத்திய அரசாங்கச் செய்தித்துரையினரால்
"சினிமாச் செய்திப் படங்கள்"

12—2—68 திங்கட்கிழமை

சர்வோதய மேளா பிரார்த்தனை.
வீரபாண்டி வித்யாலய ஆசிரியர், திரு. வி. வேதமுத்து
அவர்கள் & மாணவர்கள் குழுவினரால்
"காந்தி மகான் சரிதம்" — வில்லுப்பாட்டு.

மத்திய அரசாங்கச் செய்தித் துறையினரால்
"சினிமாச் செய்திப் படம்"

13—2—68 செவ்வாய்க்கிழமை

சினிமாச் செய்திப் படங்கள் :

ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள், சென்னையில் சர்வோதய பொருட்காட்சியில் பார்வையிட்ட படக்காட்சிகள்,

(திரு. மு. நடராஜன் அவர்களின் தமிழ் விளக்கவுரையுடன்)
சிதம்பரம் திரு. வி. கோவிந்தசாமி படையாச்சி அவர்கள்,
"காந்தி மகான் சரிதம்" — கதா காலட்சேபம்.
சென்னை பலகுரல் "சந்தர், மூர்த்தி குழுவினரால்
விகடக் கச்சேரி"

மத்திய அரசாங்கச் செய்தித்துறையினரால்
"காந்தி மகான் வாழ்க்கை வரலாறு முழுநீள சினிமாச் செய்திப் படம்"

திரு. வீ. பாலசுப்ரமணியம் அவர்கள்-"எப்பிடயாஸ்கோப்" மூலம் காந்தி வாழ்க்கை, இராட்டை வளர்ச்சி, சந்திர மண்டலப் பயணம். சிலைடு படம் — தமிழ் விளக்க உரையுடன்.

14—2—68 புதன்கிழமை

இன்னிசைக் கச்சேரி :

சிங்கநகர் திரு, எஸ். கே. மேகநாதன் - பாட்டு
திருமாந்துரை திரு. சக்கரபாணி - வயலின்
குடந்தை ஏ. பிரேம்குமார் - மிருதங்கம்
நாச்சியார்கோவில் திரு. சிங்காரம் - கடம்,
குடந்தை திரு. வி. வி. கதிர்வேலு - முகர்சங்கு

திருமதி ஆர். கே. காந்திமதி அம்மாள் — வாய்ப்பாட்டு.
தூய இருதய ஆண்டவர் தொழு நோய் மருத்துவமனை கும்பகோணம் டாக்டர் (N. ZUICKY) 'ஸ்யூக்கி', அவர்

களால் தொழுநோய் சம்மந்தமான சிலேடு திரைப்படம் (ஆங்கிலம், தமிழ் விளக்க உரையுடன்)

வீரபாண்டி வித்யாலய ஆசிரியர், திரு. வி. வேதமுத்து & மாணவர்கள் "காந்தி மகான் சரிதம்" வில்லுப்பாட்டு

மத்திய அரசாங்கச் செய்தித்துறையினரால்
செய்திப் படங்கள்.

15—2—68 வியாழக்கிழமை

திருச்சி சர்வோதய சங்க ஊழியர் திரு. எம். ஜி. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் — விகடக்கச்சேரி

அரசாங்கச் செய்தித்துறையினரால் — செய்திப் படங்கள்.

16—2—68 வெள்ளிக்கிழமை

தஞ்சை மாவட்டம் சர்வோதய பூதான ஊழியர்
திரு. வீரபதி அவர்கள் பிரார்த்தனை, காந்திமகான் சரிதம் காலட்சேபம். (டேப் இசைக் கருவியுடன்)

ஸ்ரீ மங்களகான சபாவினரின்
"அரிச்சந்திரா" 1-ம் பாகம் பொம்மலாட்டம்.

மத்திய அரசாங்கச் செய்தித்துறையினரால்
"சத்தியமே ஜெயிக்கும்" — சினிமாப் படம்,

சென்னை சர்வோதய பொருட்காட்சியில்
ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பார்வையிட்ட படக்காட்சிகள்

17—2—68 சனிக்கிழமை

இன்னிசைக் கச்சேரி

தஞ்சை குமாரி பி. சுலோசனு — பாட்டு
குடந்தை திரு, ராமராஜு பிள்ளை — பிடில்
கஞ்சனூர் திரு. நடராஜன் — மிருதங்கம்
உமையாள்புரம் திரு. வி. கதிர்வேல்- முகர்சிங்

தொழுநோய் மருத்துவமணே - குடந்தை மூலம் தொழு நோய் பற்றிய சிலேடு, திரைப்படங்கள்.

ஸ்ரீ மங்களகான சபாவினரால்

"அரிச்சந்திரா" II-ம் பாகம் பொம்மலாட்டம்.

மத்திய அரசாங்க செய்தித்துறையினரால்

சினிமா செய்திப்படம்.

18—2—68 ஞாயிற்றுக்கிழமை

சர்வோதய பொருட்காட்சி நிறைவுவிழா:

மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. ரெங்கபாஷ்யம் ஐ. ஏ. எஸ் அவர்கள் தலைமை தாங்கி நற்சாட்சி பத்திரம் வழங்கினுர்கள்.

இன்னிசை கச்சேரி

திரு. ராஜேந்திரன் ... பாட்டு

இசைத் தென்றல் திரு. எம். எம், மாரியப்பா குழுவினர் இன்னிசை.

மத்திய அரசினர் செய்தித்துறையினரால்

சினிமாசெய்திப் படக் காட்சி.

உண்மைக் குடியரசு

(பன்மொழிப் புலவர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள், எம். ஏ , பி. எல் , எம். ஓ. எல். டி. லிட். துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்.)

பொருட்காட்சித் துவக்க உரை.

“ எல்லோரும் ஓர் இனம்
எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்”-என்று

முழங்கினார் பாரதியார். ஆம்! எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாகத் திகழத் தேவையான முயற்சிகள்தான் நமது திட்டங்கள், செயல்கள் எல்லாம். நாம் எந்த இன்பத்தை அனுபவிக்கிறோமோ அதே இன்பத்தை அனுபவிப்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்க வேண்டும். குடியரசுத் தத்துவமும் அதுவே. எனவே மக்கள் அனைவருக்கும் சம வாழ்வுதர நாம் முயன்று வருகிறோம்.

காந்தியடிகளின் சர்வோதயக்கொள்கைகளும் இதனையே வலியுறுத்திக் கூறுகின்றன. இப்போது உள்ள நிலையில் ஒரு சிலரே முன்னேறி, மற்றவர்களை நசுக்கிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இந்த நிலைமாறி அனைவருக்கும் சம உரிமை கொடுக்கப்பட வேண்டும். எனவே இவ்வாறானதொரு சர்வோதய திட்டத்தை இளைஞர்கள்தான் ஆதரிப்பார்கள் போலத் தோன்றுகிறது. ஏனெனில் எதிர்காலம் நம்பிக்கை ஊட்டக் கூடிய தன்மையில் இருப்பதுபோன்ற உணர்வு அவர்களுக்குத் தான் ஏற்பட்டிருக்கிறது.

தொண்டு செய்யும் மனப்பான்மை வளர வேண்டும் :

மக்கள் அனைவரும் சமம் என்று மதிப்பவர்கள்தான் தொண்டு செய்பவர்களாகத் திகழ முடியும். மேல்நாடுகளில்

இருந்து வரக்கூடிய தொண்டுள்ளம் படைத்த பாதிரிகளுக்கு மனிதர்கள் அனைவரும் சமம் என்ற ஒரே நோக்கத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? அந்த சிந்தனையைப்பெற நாமும் முயலவேண்டும். வெளிநாடுகளிலிருந்து வந்து, இங்கு வாடி வதங்கும் மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று வந்துள்ள தொண்டுள்ளம் படைத்தவர்கள் இருக்கும்போது நாம் நமது கடமையை உணர வேண்டாமா?

இளைஞர்களிடம் எழுச்சி வேண்டும் :

இதனைத்தான் மகாத்மா காந்தியடிகள் செய்து வந்தார். எங்கெங்கே மக்கள் கஷ்டப்பட்டார்களோ, அங்கங்கே காந்தியடிகள் தோன்றினர். எந்த தீவிரத்தொண்டு மனப்பான்மையில் வெளிநாட்டவர் வந்துள்ளார்களோ, எந்த தீவிர மனப்பான்மை காந்தியடிகளை வங்காள யாத்திரையை மேற்கொள்ள வைத்ததோ, அந்தத் தீவிர மனப்பான்மைக்கு இளைஞர்கள்தான் தங்களை ஆளாக்கிக் கொள்ள தகுதிபெற்றவர்கள். இளமைதான் லட்சியத்துக்காகப் பாடுபடக்கூடிய ஒரு பருவம். எனவே அவ்வாறனதொரு இளமைத் துடிப்பைத்தான் நாட்டின் வருங்காலம் எதிர்பார்த்து நிற்கிறது.

மனுப்போடும் மனப்பான்மை அகலவேண்டும் :

அதனை விடுத்து அடுத்தவர்களை எதிர்பார்த்துப் பிழைக்கும் இழிவு மனப்பான்மை ஒழிய வேண்டும். எடுத்ததற்கெல்லாம் மனுப்போட்டுவிட்டு வாழாவிருக்கும் தன்மை குறைய வேண்டும். தனது தேவையைத் தானே பூர்த்தி செய்ய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பிச்சை கேட்பதால், மனிதனுடைய பெருமை, மானம் அத்தனையும் தொலைந்துபோய் விடுகிறது. எனவே பிச்சை போடும் மனப்பான்மையை விட்டுத் தொலைக்க வேண்டும். இந்த நாட்டை, அந்த மனப்பான்மைதான் முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். கூடியவரையில் ஒவ்வொருவரையும் உழைக்கச் செய்யவேண்டும். அதன்மூலம் வரக்கூடிய வருமானத்தின் மூலம் புதிய ஆவலை, புதிய ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

கிராமம் சுருங்குகிறது - பட்டணம் விரிகிறது :

இந்த நாட்டில் வாழ்கின்ற உழவன் நமக்கு உணவு அளிக்கிறன். பொருளாதார நிபுணர்கள் அவர்களுக்குத் தேவையான

உதவிகள் செய்யும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். நாட்டுப்புறத்தின் பொருளாதாரத்தைப் பார்த்தால், நமது விவசாய மக்கள் கடன் தொல்லையிலிருந்து இன்னும் விடுபட்டவர்களாக இல்லை. எனவே, நாட்டுப் புறத்தில் வயிறு பிழைக்க இயலாமல் பட்டணத்திற்குச் செல்ல விரும்புகிறார்கள். இதனால் பட்டணத்தில் குடிசைகள் பெருகுகின்றன. குடிசைகளின் அமைப்போ, மனிதன் வாழ அருகதையற்ற நிலையில் இருப்பதையும் நாம் காண்கிறோம். இதற்கு அரசியலார் பல ஏற்பாடுகளைச் செய்கிறார்கள், என்றாலும் அது போதாது, முடியாது.

இதற்கு வேறொரு காரணமும் உண்டு. கிராம விவசாயிகளுக்கு வருடம் முழுதும் வேலை இருப்பதில்லை. பாதி நாட்களுக்கும் அதிகமாக வீணே பொழுதைக் கழிக்கிறார்கள். எனவே அக்காலங்களில் அவர்கள் தமது இல்லங்களில் இருந்து கொண்டே பணிபுரிந்து பொருளீட்டத்தக்கதொரு வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டும். நூல் நூற்பு போன்ற வீட்டுத் தொழில்களின் நிலைகளை வளர்க்க வேண்டும்.

இளைஞர்களின் பணி :

இதற்கு நமது இளம் சிற்பிகளும், பொறியியலார்களும் இம்மாதிரியான வீட்டுத் தொழில்களை வளர்க்க வேண்டும். படிக்கும் மாணவர்களும் தொழில் புரியலாம். சென்னையில் 1500 மாணவர்கள் தம் இல்லங்களில் புரியும் தொழில்பற்றிய புள்ளி விபரம் ஒன்று சேகரித்ததில், அவர்கள் தங்கள் இல்லங்களில் தமது ஓய்வு நேரத்தில் 120-க்கும் அதிகப்பட்ட தொழில்களில் ஈடுபடுகின்றனர் என்ற உண்மை தெரிய வந்தது. எனவே இம்மாதிரியான எண்ணிறந்த தொழில்களை வளர்க்க முயல வேண்டும்.

ஓய்வு நேரப் பணிகள் பெருக வேண்டும் :

வீட்டிலேயே இருந்துகொண்டு, தங்களது வழக்கமான விவசாய வேலைகள் பாதிக்காமல், தமது மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு, ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தித் தங்களையும் காப்பாற்றிக்கொண்டு, தங்களது குடும்பத்தையும் காப்பாற்றிக்கொண்டு நாட்டையும் வளப்படுத்துகின்ற ஒரு தொண்டிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அவ்வாறான தொழிலுக்கு ஒரு கூட்டுறவையும் ஏற்படுத்தி,

அவர்கள் உற்பத்திசெய்யும் பொருட்களை விலையாக்கிக் கொடுக்கத் தேவையான ஏற்பாடுகளும் வேண்டும்.

சீனு, ஜப்பான் போன்ற நாடுகளில் கடிகாரம், ரேடியோ போன்ற சாதனங்களைக்கூட குடிசைத் தொழில்களாகச் செய்கிருர்கள் என அறிகிரும். அப்படிப்பட்ட நிலை நமது நாட்டிலும் வரும்படியாகச் செய்ய மாணவர்கள் தங்களைப் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும்.

குவியல்முறை மறைய வேண்டும்:

இன்று நாட்டில் குவியல் முறையே பெரும்பாலும் உள்ளது. ஐந்து வருடத்திற்கு ஒருமுறை அரசியலில் ஒரு விழிப்பு பின்னர் நீண்டதொரு தூக்கம் நிலவுகிறது. இதுவும் ஒருவிதக் குவியல் முறையே. இது அரசியலில் குவியல் முறை. அப்படியே பொருளாதாரத்திலும் குவியல் முறை! குவியல் முறைப்பொருளாதாரத்தில் மனிதன் இயந்திரத்திற்குள் ஒரு இயந்திரமாக மாறி விடுகிருன். அவனது எண்ணத்திற்கோ, சிந்தனைக்கோ அங்கு இடம் இல்லை.

அபிவிருத்தித் திட்டம் கிராம மட்டத்தில் தொடங்க வேண்டும்.

எனவே எங்கோ மேலிடத்தின் ஒரு மூலையில் இருந்து கொண்டு திட்டம் தீட்டப்படுகின்றது என்ற நிலையில் நன்மைகள் ஏற்படுவதில்லை. இத்திட்டங்களைப்பற்றி வெளியிட வேண்டிய பத்திரிகைகளும், அங்கு நடைபெறும் தேவையற்ற நடவடிக்கைகளையே குறிப்பிட விரும்புகின்றன. இதுவும் குவியல் முறையில் ஏற்படும் கோளாறுகளே. எனவே திட்டம் குவியல் முறையில் தீட்டப்படாமல் பரவல் முறையில் கிராமங்களில் தீட்டப்படுமானல் என்னென்ன அம்சங்கள் எவ்வாறு திட்டமிடப்பட வேண்டும்? எந்தெந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்? எந்தெந்த வரவு செலவுத் திட்டங்களுக்கு எத்தனை முக்கியத்துவம் அளிக்கப் படவேண்டும்? என்பதனை ஒவ்வொரு கிராம மட்டத்திலேயும் தொடங்கினுல் தான் ஊராட்சி ஒன்றியங்கள், வட்டாரங்கள் முதலியவைகளின் அடிப்படையில் நலம்பலபயக்க இயலும். இவ்வாறு பரவல் முறையில் அமையும்பொழுதுதான் எல்லோரும் இந்நாட்டு

மன்னர் என்று கூறும் நிலையை ஏற்படுத்த இயலும். குவியல் முறையில் சுயராஜ்யம் அமைய முடியாது. பரவல் முறையின்றி சுயராஜ்யம் இல்லை. இதனைத்தான் காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார்.

பார்த்தூண் வாழ்க்கைதான் வேற்றுமைகளை ஒழிக்கும் :

வான்புகழ் வள்ளுவர் கூறியதுபோல, தாம் சம்பாதித்து வரும் உணவை அனைவருடனும் பகிர்ந்து உண்ணும் பார்த்தூண் வாழ்க்கை வாழப்பழக வேண்டும். பார்த்தூண் வாழ்க்கைதான் பொருளாதார சுயராஜ்யம், அரசியல் சுயராஜ்யம், சமுதாய சுயராஜ்யம் என்று சொல்லத்தக்கதாகும். எனவே பரவல் முறையின் மூலம் நாடு, ஒவ்வொரு வீட்டிலும் தேசியச் செல்வங்களை வளர்க்கும் நிலையங்களாக ஆகிவிடுமானால், ஏழை எளியவர் என்ற வேற்றுமை இல்லை. மேல் ஜாதி, கீழ்ஜாதி என்ற வேறுபாடே இல்லாது ஒழியும்.

இளைஞர்களுக்கு வேண்டுகோள் :

எனவே இளைஞர்களை நான் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் இதுதான். நமது நாட்டின் நிலை தலைதூக்க வேண்டும் என்றால், நாம் பரவலாக கிராமத் தொழில்களை முன்னேற்றியாக வேண்டும். ருஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளின் தன்மை, நிலை வேறு. அத்துடன் நமது நாட்டை ஒப்பிட வேண்டிய அவசியம் இல்லை. எனவே நமது நாட்டிற்கு உகந்த முறையிலும், அடுத்த நாடுகளை எதிர்பாராமலும், நமது சக்தியையே நம்பி, நாம் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதையே பயன்படுத்த முயல வேண்டும். கிராமத்திலிருந்து பட்டணங்களுக்கு வந்து கல்விகற்ற மாணவர்கள் மீண்டும் கிராமத்திற்குச் செல்ல தயங்கும் நிலை மாற வேண்டும். நமது கல்வியும், விஞ்ஞானமும், தொழில் நுணுக்கமும் கிராமத் தொழில்களில் முன்னேற்றம் காண பயன்படுத்தப்பட வேண்டும். முன்னேறிய சில அயல் நாடுகளில்கூட நகரங்களைவிட்டு கிராமங்களுக்குச் சென்று சிறு சிறு குடில்களாக அமைத்து அமைதியாக வாழ ஏற்பாடு செய்துகொள்கிறார்கள். அதுபோல நமது நாட்டிலும் கிராமங்களில் செழுமைக் கூத்தாடும்படி செய்ய வேண்டும். மகாத்மா காந்தியடிகள் கூறிய கிராம ராஜ்யம் என்பது அதுதான்.

நமது தலையாய கடன் என்ன?

எனவே நமது மக்கள் தமது உழைப்பினுல் உற்பத்தி செய்யும் பொருட்களை நாம் வாங்க வேண்டும். நமது தாய் செய்தது, நமது தமக்கை செய்தது, நமது சகோதரர் செய்தது என்ற உணர்வு நம்மிடம் தலைதூக்க வேண்டும். நமது தங்கை செய்தது என்ருல், அதன் தன்மையை எப்படி அதிகமான ஆராய்ச்சி செய்வது இல்லையோ, அதே போல அப்பொருட்களை வாங்கி உபயோகப்படுத்த வேண்டும். தற்காலத்தில் அம்பர் இராட்டைமூலம் தயாரிக்கப்பட்ட நூல்களிலான மிகமுன்னேறிய துணிகள் எல்லாம் கதரில் வந்துள்ளன. பல அழகான அன்ருடத் தேவைப் பொருட்களும் கிராமத்தில் உற்பத்தியா கின்றன. அவைகளையெல்லாம் வாங்கிப் பயன்படுத்தி அவர்களை ஆதரிக்க வேண்டும்.

நமது சகோதரர்கள் வாழ வேண்டாமா?

இயந்திரத் தொழிலில் எப்படி அழகு இருக்க முடியும்? கையினுல் செய்த தொழிலில் கலைஞன் தன் முழு ஈடுபாட்டோடும் கலை அழகோடும் செய்கிருன். எனவே அதனை வாங்கிப் பயன்படுத்த வேண்டும். நம்முடைய சகோதரர்கள், நமது சுற்றத்தவர்கள், தமிழர்கள் பாழாய் போவதா? தமிழர்கள் ஏழைகளாகப் பிச்சை எடுப்பதா? என்ற கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்! எனவே அவர்கள் தங்களது உழைப் பினுல் செய்தளிக்கும் பொருட்களை அன்போடு வாங்குங்கள். தமிழ் எப்படி இனிக்கிறதோ அப்படியே அவர்கள் செய்த பொருட்கள் எல்லாம் உங்களுக்கு இனிக்க வேண்டும்.

தமிழரிடத்திடம்தான் தமிழ் இருக்கிறது. தமிழச்சியிடம் தான் தமிழ் இருக்கிறது. தமிழ் வாழ வேண்டுமானுல், தமிழ் வாழ்க! என்று வாழ்த்தும்பொழுது நம்மிடம் உண்மையாக ஈடுபாடு இருக்குமானுல் தமிழச்சியும், தமிழனும் தமிழ் நாட்டில் செய்யும் பொருட்களையெல்லாம் நாம் வாங்க வேண்டும்.

உண்மைக் குடியரசு :

எனவே, கிராமத் தொழில்களை ஆதரிப்பதுடன், உங் களது விஞ்ஞான அறிவு, பொருளாதார அறிவு, கலை நுணுக்கம் முதலியவைகளைப் பயன்படுத்தி நமது கிராமக் கைத்தொழில்கள் முன்னேற உதவி புரியவும் வேண்டும். அப்பொழுதுதான்

உண்மையான குடியரசை நிர்மாணிக்க முடியும். இப்பெரிய தொண்டில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமானல் நீங்கள் கிராமங்களின் நிலைகளை ஆராய வேண்டும். அப்பொழுது தான் குடியரசின் லட்சியமாகிய எல்லோரும் ஓர் நிறை என்னும் உன்னத நிலையை எய்துதலுக்கு நம்மைத் தயார்செய்ய இயலும்.

தமிழ்நாடு சர்வோதய சங்கம்,

மகாமகம் சர்வோதய கதர் கிராமத்தொழில் பொருட்காட்சி, கும்பகோணம்.

"அகர முதல எழுத்தெல்லாம்—ஆதி
பகவன் முதற்றே உலகு"

எனும் தமிழ் மறைக்கிணங்க நமது பொருட்காட்சியின் முதல் அங்கமாக தில்லை நடராசரின் திருப்பணிக் குழுவின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த "தில்லை அரங்கம்" தெய்வ அருள் பொலிந்ததாய், அன்பர்களை வரவேற்பதாய், பக்தர்களை ஆசீர் வதிப்பதாய் அமைந்திருந்தது!

தில்லை நடராசர் :

திருச்சிற்றம்பலம் திருப்பணிக் குழுவின் சார்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த "இறை அரங்கத்தில்" தில்லை நடராசரின் திருத் தாண்டவக் காட்சிகளும், பக்திப் பரவச மூட்டும் படக்காட்சிகளும் காண்போரைக் கொள்ளைகொள்ளும் விதத்தில் அமைந்திருந்தன. திருச்சிற்றம்பலத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தொல் பெருமைகளையும், சீர் சிறப்பினை யும் எடுத்தியம்பும் பல்வேறு விதமான புத்தகங்களும், சித்திரங் களும் சிற்பங்களும் இடம் பெற்றிருந்தன.

கைக்குத்தல் அரிசிப் பகுதி :

அரிசியில் மனித உடல் நலனுக்குத் தேவையான பெரும் பாலான சத்துப் பொருட்கள் அடங்கியுள்ளன. அதனை முக்கிய உணவாகக் கொள்வோர் அதிலுள்ள சத்துப் பொருட்கள் கெட்டு விடாதவாறும், வீணாகாதவாறும் பயன்படுத்துவது உடல் நலனுக்கு உகந்ததாகும்.

கிராமங்களில் தொன்றுதொட்டு மக்கள் நெல்லிலிருந்து அரிசியை பிரித்தெடுப்பதற்கு உரல், உலக்கை போன்ற எளிய கருவிகளைக் கையாண்டு, தம்முடைய உழைப்பின் மூலம்

அரிசியைத் தீட்டி உண்டு வந்தனர், இதனுல் ஆரோக்கியமும், உடல் உறுதியும் பெற்றிருந்தனர்.

நாளா வட்டத்தில் இயந்திரங்கள் உருவாயின, இதனுல் மனித உழைப்பின் மதிப்பு குறையலாயிற்று.

இவ்வியந்திரங்களில் தயார் செய்யப்படும் அரிசியில் சத்துப்பொருட்கள் நீக்கப்பட்டு விடுகின்றன, ஆதலால் இதணை உண்போர் "ஊட்டச்சத்துக் குறை" நோய்க்கு இலக்காகலாயினர். எனவே வீணக்கப்படும் சத்துப் பொருட்களை மீட்கவும் மனித சக்திக்கு மதிப்புக்கொடுக்கவும், மேற்கூறிய குறைபாடுகள் திருத்தப்படவும் முயற்சிகள் ஆரம்பமாயிற்று.

கைக்குத்தல் அரிசி ஏன்?

அ. ஆரோக்கியம் :

கைக்குத்தல் அரிசியில் சத்துப் பொருள் சிதருமல் உள்ளன.

ஆ. பொருளாதாரம் :

உமி, தவிடு போன்றவை பரவலாகக் கிடைப்பதால் கோழி, ஆடு மாடுகளுக்கான தீனி பரவலாகக் கிடைக்கிறது.

இ. சமூக நலம் :

வேலை வாய்ப்பு பரவலாக கிடைப்பதால் சமுதாயத்திற்குள் இருக்கும் இருப்பவர், இல்லாதவரிடையே ஏற்படும் மோதல் தவிர்க்கப்படுகிறது.

ஈ. அன்னியச் செலாவணி குறைப்பு:

மில்லில் தீட்டுவதைவிட கைக்குத்தல் முறையில் 3% முதல் 10% அரிசி உபரி காண்கிறது. இதனுல் அரிசி பற்ருக் குறையில் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட முடியும் எனவே, வெளிநாட்டுச் செலாவணியையும் ஓரளவு குறைக்க முடியும்,

இந்திய அரசு நியமித்த ரைஸ் மில்லிங் கமிட்டி அடியிற் கண்ட முடிவுக்கு வந்துள்ளது. "தற்சமயம் மில்களில் அறைக்

கப்படும் நெல் முழுதும் கையால் குத்தப்படுவதாய் இருந்தால் நாட்டுப்புறத்தில் உள்ள ஜனங்களில் தற்சமயம் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைத் தவிர சுமார் 26 லட்சம் அதிகப்படியாக வேலை கொடுக்கலாம் என்றும், மில்லில் அறைப்பதைவிட கைக் குத்தல் முறையில் சுமார் 3% அரிசி உபரி காணுவதால் தேசத் திற்கு வருடம் 20 கோடி ரூபாய் மிச்சம் ஆகும் என்றும் கூறி இருக்கிறார்கள்.

கைக்குத்தல் அரிசியில் வைட்டமின் 'B' என்னும் சத்து அதிகம் இருக்கிறது. இது நரம்புகளையும், தசைகளையும், நெஞ் சையும் பாதுகாக்க உதவுகிறது. மற்றும் உடல் நலம்பெற தேவையான புரதச்சத்து அரிசியின் முளையிலும் தாதுப்பொருள் பாஸ்பரஸ், கொழுப்பு, வைட்டமின் A, B-1, B-2 முதலியவை கள் மேற்போர்வையிலும் இருக்கின்றன. அரிசியைத் தீட்டும் போது இவையெல்லாம் அரிசியினின்றும் விடுபட்டு, தவிட் டோடுசேர்த்து நீக்கப்பட்டு விடுகின்றன. நடுப்பாகத்தில் இருக் கும் ஸ்டார்ச் மட்டுமே எஞ்சியிருக்கும்,

ஆதலால் மில் அரிசியில் அல்லது தீட்டிய அரிசியில் உடம்பை வளர்க்கவும், நோயினின்றும் தடுக்கவும் அவசியமான சத்துக்கள் இல்லாது போகின்றன.

(தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்)

கீழ்க்காணும் அட்டவணை அதனை நன்கு விளக்கும். 100-கிராம் அரிசியில் உள்ள சத்துப் பொருள்களின் அளவு.

சத்துப் பொருட்கள்	பச்சை அரிசி		புழுங்கல் அரிசி	
	மில்	கைக்குத்தல் அரிசி	மில்	கைக்குத்தல் அரிசி
மாவுச் சத்து ...	79.20 %	78.00 %	79.20 %	77.40 %
புரதச் சத்து ...	6.90 %	8.50 %	0.40 %	8.50 %
கொழுப்புச் சத்து ...	0.40 %	0.60 %	0.40 %	0.60 %
தாதுப் பொருள் ...	0.50 %	0.70 %	0.80 %	0.90 %
சுண்ணும்புச் சத்து ...	0.01 %	0.01 %	0.01 %	0.01 %
பாஸ்பரஸ் சத்து ...	0.11 %	0.17 %	0.15 %	0.28 %
இரும்புச் சத்து * ...	1.00 %	2.80 %	2.20 %	2.80 %
வைட்டமின் A [யூனிட்களில்]	0.00 %	4.00 %	0.00 %	0.15 %
வைட்டமின் B ,,	20	60	70	90
மொத்த உஷ்ண சக்தி (கலோரிகளில்)	348	351	326	349

* ஒரு யூனிட் என்பது (One Inter-National Unit) $\frac{1}{10,00,000}$ கிராமிற்குச் சொந்தம். சமம்.

* கலோரி என்பது 1-கிராம் தண்ணீரை 1-டிகிரி (சென்டிகிரேட்) வெப்பம் ஏற்படுத்துவதற்குத் தேவையான வெப்பத்தின் அளவாகும். (உணவுகள் யாவும் வெப்ப சக்தியாக மாற்றப்பட்டே உடலுக்குப் பயன்படுகின்றன).

நெல்லை ஊற வைத்தலும், வேகவைத்தலும் :

கிராமிய முறையில் நெல்லை அண்டாக்களின்மூலம் வேக வைப்பதால் அடியிலுள்ள நெல் குழைந்து விடும். மேற்புறம் உள்ளவை வேகாமல் இருக்கும். இதனுல் முறையே, சத்துப் பொருள் வெப்பத்தால் எரிக்கப்பட்டும், அரிசி உற்பத்தி குறைந்தும் விடுகின்றன.

எனவே நவீன முறைப்படி ரசாயனம் கலந்த வெந்நீரில் மூன்று மணிநேரம் ஊற வைப்பதால், வேக வைப்பதற்கும், ஊறுவதற்கும், உலர்த்தவும் ஆகும் நேரமும் வேலையும் மீதமாவதுடன், குருணையும் குறைந்து, செலவும் குறைகிறது.

தவிட்டிலும் சத்து:

இவ்வாறு தயாரிக்கப்படும் கைக்குத்தல் அரிசியின் தவிட்டிலும்கூட கால்சியம், இரும்புச் சத்து போன்ற சத்துக்களும், குறிப்பாக பாஸ்பரஸ் 8.7 சதமும், புரோட்டீன் 19 சதமும், கொழுப்பு 20 சதமும், இன்னும் வைட்டமின் B-1, B-2, E போன்றவைகளும் அடங்கியுள்ளன. எனவே தவிடும் ஒரு சிறந்த உணவே!

தவிட்டிலிருந்து உணவு தயாரித்தல் :

தவிட்டை உணவுப் பொருளாக ஆக்குவதற்கு முதலில் நன்ருக வறுக்க வேண்டும். சப்பாத்தி செய்வதற்கு ஏற்றவாறு தவிட்டை மாவுபோல் அறைத்து அதில் 15 சதம் கருப்பட்டியும் 5 சதம் தேங்காய்ப் பூவும், 30 சதம் சோளம் அல்லது ராகி மாவும் சேர்த்து சப்பாத்திகளாகச் செய்து பல இடங்களில் உண்டு வருகிருர்கள். வைட்டமின் B குறைவால் ஏற்படும் நோய்களுக்கு இந்தத் தவிட்டு உணவைக் கொண்டே எளிய முறையில் குணமாக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனவே சுருங்கக்கூறின் தவிடு ஒருடானிக் என்றே கூறலாம்.

புதிய கருவி :

எனவே கைக்குத்தல் தொழிலைத் திறம்பட நடத்துவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல்வேறு கருவிகளுள் கண்காட்சியில் இடம்பெற்ற 'ஹங்கர்' என்னும் கருவி சிறப்பான ஒன்றாகும். இக்கருவியின்மூலம் ஒரு நாளில் இரண்டு பெண்கள் 10-மூட்டை கைக்குத்தல் அரிசியைத் தயாரிக்க முடியும். இயக்குவதும் சுலபம். இதனால் கிடைக்கும் அரிசியும், நேர்த்தியாக உள்ளது என்பதை 30-க்கும் மேற்பட்டவர்கள் இவ்வியந்திரத்திற்கு ஆர்டர் கொடுத்திருப்பதிலிருந்தே தெளிவாகத் தெரிந்துகொள்ள இயலுகிறது. எனவே கைக்குத்தல் அரிசித் தொழில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பட்டி-தொட்டிகளில் பரவி மக்களுக்குப் பயன்பட்டு, நாடு நலம்பெற முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுவது அவசியமாகும்.

சுருங்கக் கூறின் :

(1) 100-பேருக்குத் தேவையான அரிசி தீட்டப்படுவதற்கு 1-நபருக்கு முழுநேர வேலை வாய்ப்பு அளிக்க இயலுமாதலால் நாட்டில் 1 சதம் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

(2) மில்லில் தீட்டினால் 100-லிட்டர் நெல்லில் 50-லிட்டர் அரிசி கிடைக்கும். கைக்குத்தல் மூலம் தீட்டினால் 53-லிட்டர் கிடைக்கும். இந்த 3-லிட்டர் கூலியாகக் கொடுக்கப்பட்டுவிட்டாலும்கூட மில் அரிசியுடன் ஒப்பிடும்போது இலவசமாக அரிசி தீட்டப்பட்டு கிடைப்பதாகக் கொள்ளலாம். இதனால் செலவு மிச்சம்.

(3) 1-லிட்டர் மில் அரிசி சோறு உழைப்பாளிகள் 3-நபர்களுக்கு போதுமானது. ஆனால் அதே அளவு கைக்குத்தல் அரிசியில் 4-நபர் தாராளமாகச் சாப்பிடலாம்.

(4) இவைகளின் மூலம் இன்றுள்ள அரிசிப் பற்றுக்குறையான 8 சதத்தை கணிசமாகக் குறைத்து வெளிநாட்டு இறக்குமதியைத் தவிர்த்து நம்நாட்டு செல்வத்தை அயல்நாடு செல்லவிடாமல் தடுக்கலாம். எனவே, கைக்குத்தல் அரிசித் தொழில் சிறந்தோங்குதல் நாட்டிற்கு நன்மை பயக்கும்.

மண்பாண்டத் தொழில் அரங்கம்!

மண்பாண்டத் தொழில் ஒரு பழம்பெருமை வாய்ந்த தொழிலாகும். இன்றைக்குச் சுமார் 5000-ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து சமவெளி நாகரீகக் காலம் தொட்டே இக்கலையை மக்கள் அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகளும், எடுத்துக் காட்டுகளும் காணக் கிடைக்கின்றன.

நாளாவட்டத்தில் இரும்பு, வெண்கலம், பித்தளை, அலுமினியம், செம்பு முதலான உலோகங்களாலான பாத்திரங்களும் சமீபத்தில் தோன்றிய கெட்டியான பிளாஸ்டிக் மற்றும் எவர் சில்வர் போன்றவைகளாலான பாத்திரங்களும் கவர்ச்சிகரமாயும் பல்வேறு வண்ணங்களுடனும் உலவி வருவதால் மண்பாண்டங்களின் பெருமை குன்றலாயிற்று என்ருலும் மற்ற ஈயப் பாத்திரங்கள் போன்றவைகளுடன் ஒப்பிடும்பொழுது கை தவறுதலாலும் கவனக் குறைவினுலுமே மட்பாத்திரங்கள் உடைகின்றன. இல்லாவிட்டால் நீடித்து உழைப்பதில் சலித்ததில்லை. என்ருலும் 1931-ல் மண்பாண்டத் தொழில்புரிந்து வந்தவர்களின் தொகை 7.6 லட்சத்திலிருந்து 1951-ல் 4.4 லட்சமாகக் குறைந்தது. தற்சமயம் பாரதத்தில் சுமார் 5 லட்சம் குடும்பங்களில் மண்பாண்டத் தொழில் நடைபெற்று வருகிறது.

என்ருலும் மண்பாண்டங்களின் தனிச்சிறப்பையும் அனுகூலங்களையும் முழுமையாகக் கவரவல்ல சாதனம். இதுவரை புழக்கத்திற்கு வரவில்லை என்றே கூறலாம். எனவே, மண்பாண்டத்தின் பெருமையும், அதன் தூய்மையையும், ஆரோக்கியத்திற்கு அதுவுதவும் முறையினையே, கிராம மக்களின் வேலை வாய்ப்பு அம்சங்களையும் பாமர மக்களுக்கு எடுத்துக் கூறுவது இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் கடமையாகும். அதே சமயத்தில் தற்போதயக் காலவண்ணங்களுக்குத் (Fashion) தகுந்த முறையில் மண்பாண்டங்கள் கவர்ச்சிகரமாகவும் சிறப்பியல்புகள் பொருந்தியதாகவும் குறைவான விலையில் அமையுமானுல் சந்தேகமின்றிப் பலர் விரும்பி வாங்குவார்கள்—பயன் பெறுவார்கள் என்று திடமாகக் கருத இடமிருக்கிறது. எனவே

இத்தொழிலின் செய்முற்ற மற்றும் கருவிகளின் தரமும் உயர்த்தப்பட்டு வருகிறது.

பண்டையக் காலம் தொட்டே சீனு, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்யப்படும் மண் பொம்மைகளும், தட்டங்களும் இன்னும் கவர்ச்சிகரமாகத் திகழ்ந்து வருவது இதற்கொரு எடுத்துக்காட்டாகும்.

நவீனக் கருவிகளும், முன்னேற்றங்களும் :

இத்தொழிலுக்கு முக்கியமான கருவி சக்கரமாகும். இது பால்பேரிங்குகளுடன் கூடியதாகச் சிறப்பான முயையில் கோட்டமின்றி சுழலக்கூடியதாகவும், குறைந்த நேரத்தில் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடியதாகவும் அமைக்கப்பட்டு தற்சமயம் வினியோகிக்கப்படுகின்றன.

இதைத்தவிர (அ) மண் வகைகளைப் பரிசோதனை செய்து செங்கல், சதுரக்கல், வெள்ளைப் பாலீஷ் கல், (Glard), ஓடு மற்றும் நுணுக்கமான பொருட்களைத் தயாரிப்பதற்கும், அவைகளுக்குத்தேவையான மண் வகைகளைத் தனித்தனியே பிரித்துக் கூறுவதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) கருப்புக்களிமண்ணிலிருந்து தண்ணீர்க் குழாய்கள் செய்தல், சில ரசாயனப் பொருட்களைக் களிமண்ணுடன் கலந்து மிகவும் நேர்த்தியான வெடிப்பு ஏற்படாத தண்ணீர் குழாய்கள் செய்யத் தேவையான ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

(இ) சுமார் 1200 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலை தரக்கூடிய சூளை அமைந்தால் கிராமங்களிலேயே பலதரப்பட்ட நுணுக்கமான மண்பாண்டங்களையும் உயர்ந்தரக பளபளப்பான மண்பாண்டங்களையும் செய்ய இயலும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஈ) கிராமீய குளிர்சாதனங்கள் தயாராகி ஆராய்ச்சியில் இருந்து வருகிறது.

(உ) மலிவான சக்கரங்களில் மாறுதல் செய்யத்தகுந்த புஷ் (Bush)களும், சுலபமாக இடம் விட்டு இடம் பெயர்க்கக் கூடிய அடித்தளங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மண்பாண்டம் செய்தல்.

மகன்சூலா என்னும் அடுப்பு :

தொன்று தொட்டுத் தமிழகத்தில் பயன் படுத்தப்படும் அடுப்பு தனித் தனியாகப் பாத்திரங்கள் வைத்து அமைக்கூடியவைகளாக அமைக்கப்பட்டு வந்தன. சில இடங்களில் 'கூட்டு அடுப்பு' என்று பெயர்பெற்ற இரண்டு பாத்திரங்களை வைக்கத் தகுந்த அடுப்புகளும் பழக்கத்தில் இருந்து வந்தன. ஆனால் இந்த மகன் சூளா என்னும் அடுப்பு ஒரே இடத்தில் வைத்து எரிக்கும் எரிபொருளின் உஷ்ணத்திலேயே மூன்று தனித்தனி இடங்களில் ஒரே சமயத்தில் 3-பாத்திரங்களில் பல்வேறு உணவு வகைகளைத் தயாரிக்கத்தக்க விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் புகைப் போக்கியும் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளதால் புகைத் தொந்திரவின்றி எளிதாகச் சமையல் செய்ய இயலுகிறது. எனவே இதனல் பெண்கள் கண் கசக்காமல் சமையல் செய்ய ஒரு நல்ல கருவி.

1. எரிபொருள் மிச்சம்.
2. குறைந்த நேரத்தில் சமைத்து விடலாம்.
3. விலையும் மலிவு.

4. புகையின் தொந்தரவிலிருந்து பெண்மணிகள் நிவாரணம்பெற இயலுகிறது.

உற்பத்தியின் பல்வேறு அம்சங்கள் :

வீட்டிற்கு வேண்டிய அடுப்பு மற்றும் மண்பாண்டங்களைத் தவிர செங்கற்கள், கூரை ஓடுகள், தண்ணீர்க் குழாய்கள் போன்றவைகளும் செய்யப்படுகின்றன. இவைகளுக்குச் சாதாரண கழி மண்ணைத் தவிர எரிபொருளாக நிலக்கறிக்கழிவு, ரயில் எஞ்சின்களில் மீதமாகும் சாம்பல் முதலியவைகளையும் பயன்படுத்தி கழிவிலிருந்து பொருட்கள் உற்பத்திசெய்யும் பணியும் (Weath from Waste) மேற்கொள்ளப்படுகின்றன.

உற்பத்தியும், வேலை வாய்ப்பும் :

இத்திட்டத்தால் நாடெங்கிலும் நடைபெறும் உற்பத்தியின் அளவும், வேலை வாய்ப்பு அம்சங்களும் பின்வருமாறு :

1965—66-ல் **வேலை வாய்ப்பு**

முழு நேரப்பணி	1,871
	15,319
பகுதி நேரப்பணி	9,875

உற்பத்தி:

1964—65-ல் உற்பத்தி	112.95 லட்சம்
1965—66-ல் உற்பத்தி	113.66 லட்சம்

விற்பனை :

1964—65-ல் விற்பனை	114.96 லட்சம்
1965—66-ல் விற்பனை	127.36 லட்சம்

கண்காட்சிக் கலை அரங்கில் :

இப்பணியின் பல்வேறு சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டும் வகையில், மகாமகம் கண்காட்சிக் கலையரங்கில் சிதம்பரம் கிளையின் ஒரத்தூர் மண்பாண்ட உற்பத்திக் கிளையின் சார்பில் உற்பத்திப் பணிகள் செய்கலை மூலம் விளக்கிக் காட்டப்பட்டன. ஜாடிகள் மற்றும் பொம்மை முதலியவைகளின் செயல் திறமை முறையும் காண்போரின் கருத்துக்களைக் கவர்வனவாக அமைந்திருந்தன.

மண்ணால் ஆன வண்ணப் பதுமைகள் :

மண்பாண்டத் தொழிலின் மற்றொரு அம்சமாக மண்ணி ணுல் ஆன பதுமைகள் பல்வேறு வண்ணங்களிலும், உருவங் களிலும் செய்து விற்பனைசெய்து வருகிறார்கள். இவ்வாறு உற்பத்தியாகும் மண், மற்றும் காகிதக் கூழினுல் ஆன பதுமை கள் மோல்டிங் முறையில் கையினுலேயே செய்யப்பட்டு அயல் நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. இவை வெளிநாடுகளில் பெயரும் புகழும் பெற்றுள்ளன. அன்னியச் செலாவணியைத் தேடித்தருகின்ற அருஞ்செல்வங்களாகவும் திகழுகின்றன.

கண்காட்சியில் பதுமை அரங்கம் :

தென்ஆற்காடு மாவட்டம் வண்டிப்பாளையம் பதுமை உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் சார் பில் பதுமைக் காட்சி அரங்கம் சிறப்பான முறையில் எடுப்பாக அமைக்கப்பட்டிருந்தது. இந்த சங்கத்தின் சார்பில் ஆண் டொன்றுக்கு ரூ. 30,000 பெறுமானமுள்ள மண் மற்றும் காகித பொம்மைகள் உற்பத்தி செய்யப்பட்டு பெரும்பகுதி மலேயா

போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இக்காட்சியில் இடம்பெற்றிருந்த புத்தர், சிவபார்வதி சிலைகளும், நாயின் உருவச் சிலையும் காண்போரின் இதயத்தில் நீங்கா நினைவைப் பெறத்தக்கவை என்று கூறினுல் அது மிகையாகாது.

பல்வேறு வடிவங்களையும், மனித உரு, கடவுளர்களின் சிலை மற்றும் பிராணிகள் போன்றவைகளின் பிரதிகளை சிறிய-பெரிய உருவங்களாக மண் மற்றும் காகிதக் கூழ் ஆகியவை களின் மூலம் செய்யும் முறை, சிற்றரசர்கள் காலத்தில் சிறப்புற் றிருந்தது. ஆனுல் தற்காலத்தில் பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் போன்றவைகள் இத்தொழிலுடன் போட்டியிட்டு இயந்திர முறையில் ஏராளமாக உற்பத்தி செய்ய ஆரம்பிக்கவே இதன் மதிப்பும், பெருமையும் குறையலானது.

எனினும் தற்சமயம் இம்மாதிரியான சிறு தொழில்களுக்கு மத்திய, மாநில அரசுகள் ஊக்கமளித்து முன்னேற்ற முயன்று வருகின்றனவாதலால் இவை புத்துயிர் பெற வசதியும், சந்தர்ப் பமும் உதவியும் அளித்துப் போற்றப்பட்டு வருகின்றன.

இம்மாதிரியான தொழில்கள் நாட்டின் பல்வேறு பகுதி களில் நடைபெற்ற போதிலும்கூட தென் ஆற்காடு மாவட்டம்

கடலூர்தாலூகா வண்டிப்பாளையம் கிராமத்தில் பழம் கைத்திறன்களைப் பாதுகாத்து மேலும் வளரச் செய்யும் பொருட்டு தொழில் சங்கம் அமைக்கப்பெற்று 1949-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. 42 அங்கத்தினர்களைக் கொண்ட இந்த சொசைட்டியின்மூலம் உற்பத்தியாகும் மண், மற்றும் காகிதத்தினுலான பொம்மைகள் நாடு முழுதும் அனுப்பப்படுவதுடன் மலேயா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. இவ்வரங்கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்ட சிறிய - பெரிய பொம்மைகள் காண்போரின் மனதில் அகலா இடம்பெற்றது. குறிப்பாக சிவ, பார்வதி சிலைகள், புத்தர் சிலை, நாயின் உருவம் போன்றவை சிறப்பானவைகளாகத் திகழ்ந்தன.

தேனீ வளர்ப்பு அரங்கம்!

தேன் இயற்கை அன்னையின் ஒரு அற்புதத் தயாரிப்பு! மதிப்புமிக்கதொரு உயர்ந்த பொருள் இன்மருந்து தேனின் ஒவ்வொரு துளியிலும் மனித உடலுக்குத் தேவையான பொட்டாசியம், இரும்பு, மகனீசியம், சோடியம், குளோரின், சல்பர், பாஸ்பரஸ் போன்ற பல்வேறு விதமான உணவுச் சத்துக்கள் அடங்கியுள்ளன. நோயற்ற வாழ்வும், சாவற்ற வாழ்வும்கூட தேனிலிருந்து கிடைக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

தேனின் இனிமையில், திராட்சையின் தித்திப்பும், பழ ரசத்தின் பாங்கும், கரும்பின் சுவையும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன.

தேனீக்கள் பல்வேறு மலர்களிலிருந்து தேனைச்சேகரித்து வருகின்றனவாகையால் அதில் புரொட்டீன், வைட்டமின் மற்றும் பல்வேறு விதமான சத்துப் பொருட்கள் அடங்கிய மருந்துப் பொருளாக இருக்கிறது.

கரும்புச் சர்க்கரையைப் போல் இருமடங்கு தித்திப்புத் தன்மை வாய்ந்ததாதலால் சர்க்கரைக்குப்பதிலாகத் தேனை உபயோகித்து வருவோமானுல் சர்க்கரைக்கு ஆகும் செலவைப் பாதியாகக் குறைக்க முடியும்.

தேன் ஒரு முதல் தரமான உணவு 1-ராத்தல் தேனில் 30-முட்டை அல்லது 1½-படி பாலுக்கு உண்டான சக்தி உள்ளது. உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாச் சத்தும் அதில் அடங்கியுள்ளது. ஒரு கிலோ கிராம் தேனில் 3150 யூனிட் காலரி இருக்கிறது. எனவே இது ஒரு சிறந்த டானிக் ஆகும்.

வேதகாலத்திலிருந்தே கடவுளர்க்கு மிகுந்த மரியாதையுடன் தேன் படைக்கப்பட்டு வருவதால் புனிதமானதும், நல்ல தூய்மையானதும்கூட! உணவுப் பொருளாக மட்டுமில்லாது சர்க்கரை நோயாளிகள், கருவுற்ற தாய்மார்கள், பச்சிளங் குழந்தைகளுக்கும் தேன் ஒரு வரப்பிரசாதம். மற்றும் கண் எரிச்சல், வயிற்று வலி, சுவாசக் கோளாறுகள், ரத்த சோகை,

மலச்சிக்கல், க்ஷயரோகம், நீரிழிவு ஆகிய நோய்கள் குறைய தேனை வழக்கமாகச் சாப்பிட்டால் நலங்காண இயலும்.

ரத்தத்திலுள்ள ஹீமோ குளோபின் என்னும் வெள்ளை அணுக்களைத் தேன் விருத்தி செய்யக் கூடுமாதலால் நோய்த் தடுப்பு ஆற்றல் திசுக்களுக்கு நிரம்பக் கிடைக்கிறது.

உப-தொழில் :

ஒருநபர் தேன் கூட்டை பிடித்து வளர்த்து வந்தால் ஒரு வருடத்தில் 20-முதல் 25-கிலோ வரை தேன் எடுக்கலாம். எனவே குறைந்த செலவில் நிறைந்த ஊதியம் கிடைப்பதால் இது ஒரு பயனுள்ள ஓய்வு நேரத் தொழிலாகக் கொள்ளலாம்.

விவசாய உற்பத்தி மிகுகிறது :

இத்தனைக்கும் மேலாக தேனீக்கள் பல்வேறு மலர்களில் உட்கார்ந்து தேனைச் சேகரிப்பதால் அயல் மகரந்தச் சேர்க்கை ஏற்பட வசதி ஏற்படுகிறது. குறிப்பாக நெல், கம்பு போன்றவை களில் 75 சதம் கூடுதலான மகசூல் தர தேனீக்கள் மிகவும் உபயோகமாக இருக்கின்றன. இதனுல் வெளிநாடுகளில் தேனீ வளர்ப்பாளர்கள் வாடகை பெற்றுக்கொண்டு தேனீப் பண்ணை களை விவசாயிகளின் மகசூல் நிலங்களில் கொண்டுபோய் வைத்து வாடகையும், தேனும்பெற்று நல்ல ஊதியமும் பெறுகின்றனர்.

பாரதமெங்கிலும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 75 லட்சம் மதிப்புள்ள 12 லட்சம் கிலோ தேன் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகி வருகிறது. இவைகளில் சுமார் 60 சதம் மைசூர், கேரளா, தமிழ்நாடு ஆகிய 3-மாநிலங்களில் உற்பத்தி செய்யப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த தேனைச் சேகரிப்பது, பாதுகாப்பது, அதன் உபயோகத்தை விளக்கிக்கூறுவது ஆகிய நோக்கங்களுக்காக கதர் கமிஷன் இத்தொழிலுக்கு தேவையான பல்வேறு உதவிகளை நல்கி வருகின்றனர்.

தேனைப் பரிசோதித்தல் :

தேன் கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்கான Fisha's Test, Aniline Cholonde Test ஆகிய இருமுறைகளிலும் சுமார்

140 மாதிரிச் சோதனைகள் செய்யப்பட்டன. இதன் பயனாக இம்முறைகள் கலப்படத்தை உறுதியாகக் கூற முடியாது என்பது தெளிவாக்கப்பட்டது என்றாலும், 'அக் மார்க்' செய்வது ஒரு கலப்படத் தடுப்பு முறையாகக் கையாளப்பட்டு வருகிறது. சாதாரணமாகத் தேனைப் பரிசோதிக்க வேண்டுமானால், ஒரு கண்ணாடி தம்ளரில் தெளிவான தண்ணீர் எடுத்துக்கொண்டு சில துளி தேனை அதில் விடவேண்டும். தேன் எவ்வித களங்கத்தையும் உண்டுபண்ணாமல் நேராக அடிபாகத்தை அடையுமானால் அது சுத்தமான தேன் என்று காணலாம்.

அது கலப்படம் செய்யப்பட்ட தேனானால் தண்ணீரில் பட்டதும் கலப்பட வஸ்துக்கள் கரைந்து தண்ணீரில் கலங்கி விடும்.

பொருட்காட்சிக் கலையரங்கில் தேன் அரங்கம்:

இவ்வாறு சிறப்புமிக்க தேனைப்பற்றியும் அதன் பெருமைகளையும் பொதுமக்கள் அறியும் வண்ணம் காந்தி நிகேதன் ஆஸ்ரமம் தே. கல்லுப்பட்டியின் சார்பில் தேன் வளர்ப்பு அரங்கம் ஒன்று நிறுவப்பட்டது. தேனீக்களைக் கூடுகளில் எல்லோரும் வளர்க்கலாம். தேனும், மெழுகும் எடுத்துப் பயன் பெறலாம் என்பனபற்றியும், பருவ காலங்களுக்கேற்ப தேனீக்

கூட்டங்களை விஞ்ஞான முறையில் பராமரிக்கும் வழிவகைகள் இவைகளில் ஆஸ்ரமம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள்பற்றியும் விளம்பரப்படுத்தப்பட்டது. ஆஸ்ரமத்தின் சார்பில் ஆண்டொன்றுக்கு சுமார் 300-கிலோ மெழுகும் உற்பத்தி செய்யப்படுகிறது.

பாரதமெங்கிலும் தேனீ வளர்க்கப் போதிய சூழ்நிலை இருந்தபொழுதிலும் இத்தொழில் சரியான முறையில் பலரது கவனத்தைக்கவர வெகுகாலம் ஆகிவிட்டது. இதற்குஅந்தந்தப் பிரதேசத்தின் இயற்கை வளமும் துணை நிற்றல் அவசியம். நாடெங்கிலும் உற்பத்தி செய்யப்படும் 11.41 லட்சம் கிலோ தேனின் பெரும்பகுதி அதாவது 60 சதம் தமிழகம், கேரளம், மைசூர் ஆகிய 3-மாநிலங்களாலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இத்தொழிலில் 1964—65-ல் 1120 நபர் முழுநேர வேலைவாய்ப்புப் பெற்றிருந்தனர். 1965—66-ல் அது 1195-ஆக உயர்ந்தது. மற்றும் 2,37,544 நபர்கள் ஓய்வு நேரத் தொழிலாக இதனைக் கொண்டுள்ளார்கள்.

கைக்காகித அரங்கம்!

இன்றைய நாகரீக வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்ருக மாறிவிட்ட காகிதத்தை அனுதினமும் பயன்படுத்தாத நபர் உலகில் சராசரியாகப் பார்த்தால் எவரும் இருக்க முடியாது என்றே கூறலாம். எனவே ஒரு நாடு அதன் இன்றியமையாத் தேவைப் பொருட்களை புனைவதில் மனித சக்தியையும், கழிவு பொருட்களையும் பயன்படுத்த முயலுமானுல் அந்த நாட்டின் பொருளாதாரம் சீராக முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

அன்ருட வாழ்வில் வீணுக்கப்படும் பொருட்களான துணி கித்தான், கழிவு காகிதங்கள் போன்றவைகளையும், கரும்புச் சக்கை, கழிவு பருத்தி போன்றவைகளையும் பயன்படுத்தி மிக நேர்த்தியான காகிதங்களைச் செய்ய முடியும். இன்றைய நிலையில் நமது நாட்டில் முழுவதுமாக இவ்வாறு வீணுக்கப்படும் கழிவுகளின் மதிப்பு சுமார் 200 கோடி ரூபாய் என மதிப்பிடப் பட்டுள்ளது. இவ்வாறு கோடிக்கணக்கான செல்வங்கள் வீணுக் கப்படுவது ஒருபுறமிருக்க, வேலையில்லாத மக்கள் மறுபுறம் வாடி வதங்குகின்றனர்; இவ்விரண்டையும் இணைத்துச் செயலாற்ற தேவையானதொரு திட்டம் இல்லை. இந்நிலையில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 20-கோடி ரூபாய் மதிப்புள்ள காகிதம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியும் செய்யப்பட்டு வருகிறது. வீணுகும் கழிவுப் பொருட்கள் ஒருசில இடங்களின் மூலமாக மட்டும் வீணுக்கப்படுவதாகவும், கூற முடியாது. ஒவ்வொரு கிராமங்களிலும், ஒவ்வொரு மனிதர்களாலும் பரவலாக இக்கழிவு செய்யப்பட்டு வருகிறது. எனவே, இக்கழிவுப் பொருட்களைப் பயன்படுத்திக் காகிதம் செய்யும் தொழிலும் பரவலான முறையில் கிராம வாரியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்விடங்களில் கிடைக்கும் கழிவுப்பொருட்களை ஆங்காங்கே ஏற்படுத்தப் படும் தொழிற்கூடங்கள் பயன்படுத்த வேண்டும். கழிவிலிருந்து செல்வங்கள் உற்பத்தியாக வேண்டும். அயல் நாட்டு இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும். இதுதான் காந்தியடிகள் நமக்கு வகுத்துக் கொடுத்த திட்டம்,

நமது நாட்டில் பிரதிநபர் 2-கிலோ எடையுள்ள துணியை உடுத்துவதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். இதே எடையுள்ள துணி பிரதி ஆண்டும் கழிவாகிக் கொண்டிருக்கிறது. இதனைக் காகிதம் செய்வதற்குப் பயன்படுத்தலாம். இன்று காகிதத்தின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. காகிதம் மனிதனின் நாகரீகத்தை வளர்க்கும் கருவிகளில் ஒன்ருக ஆகி விட்டது.

பழமையும்—புதுமையும் :

இயந்திர சகாப்தம் ஏற்படுவதற்கு மூன்னல் முதலில் மக்கள் எழுதுவதற்குப் பனை ஓலை, தாழை இலை, செப்புத் தகடு, துணி போன்றவற்றைப் பயன் படுத்தி வந்தார்கள். முதன் முதலில் எகிப்தில்தான் கைக்காகிதம் செய்யும்முறை ஆரம்பிக் கப்பட்டு **(Papyres)** 'பேபைரஸ்' என்னும் புல்லினைக் காகிதமாக செய்து பயன்படுத்தி வந்தார்கள். நாளடைவில் இப்புல் கிடைப் பது அரிதாகிவிட்டது. எனவே கி. பி. 105-ல் சீன நாட்டைச் சேர்ந்த **(Sayaloon)** சாயலூன் என்பவர் (மல்பரி) முசுக் கொட்டை மரப் பட்டைகளைக் கொண்டு காகிதம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். நீண்ட நாட்கள் வரை இக்காகிதம் செய்யும் முறையின் இரகசியம் வெளியிடங்களுக்குப் பரவாமல் இருக்க அரசாங்கம் தடைவிதித்து இருந்தது. கி. பி. 750-ல் சீனுவுக்கும் அரேபியாவுக்கும் போர் மூண்டபோது சீன தோல்வி யுற்றது. போரில் பல சீனர்கள் கைது செய்யப்பட்டு அரேபி யாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அரேபிய மன்னர் அவர்கள் செய்துவந்த தொழிலைப்பற்றி விசாரித்தார். அவர்கள் தாங்கள் செய்துவந்த காகிதத் தொழிலைப்பற்றிக் கூறினர்கள். எனவே அரசன் கைதிகளை விடுதலை செய்து, சுதந்திரமாகத் தொழில்செய்யும் பொருட்டு 'சாமர்' என்னும் நகரத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பித்தார்.

அரேபியா ஒரு வியாபார ஸ்தலமானதால் அங்கிருந்து இத்தொழில் பல நாடுகளுக்கும் பரவ ஆரம்பமாயிற்று. கி. பி. 9-ம் நூற்ருண்டின் இறுதியில் மொராகோ, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கும், கி. பி. 11-ம் நூற்ருண்டில் பிரான்ஸ், போர்ச்சுக் கல் ஆகிய நாடுகளுக்கும், கி.பி. 12-ம் நூற்ருண்டில் ஜெர்மனிக் கும் பரவியது. பின்னர் கி. பி. 13-ம் நூற்ருண்டில் இங்கிலாந் திலும், கி. பி. 17-ம் நூற்ருண்டில் அமெரிக்காவிலும் காகிதம் செய்யும் தொழில் பரவியது.

வளர்ச்சியும் — தளர்ச்சியும் :

பாரதத்தில் கஜினிமுகம்மது படையெடுப்பிற்குமுன் இத்தொழில் நல்லமுறையில் நடைபெற்று வந்தது. ஷெர்ஷா என்பவர் முதல்முதலாக நிலங்களை அளந்து அவைகளின் தரத்திற்கேற்ப தீர்வை விதித்தார். அப்பொழுது ஏராளமான காகிதம் தேவைப்பட்டது. ஆகையால் காகிதம் செய்யும் தொழில் மேலோங்கியது. அன்று குறுப்பிட்ட சில வகுப்பார் மட்டும் அத்தொழிலைச் செய்து வந்தார்கள். இன்றும் வடநாட்டின் ஒருசில இடங்களில் இத்தொழில் பரம்பரையாக நடைபெற்று வருகிறது. தமிழகத்திலும்கூட காஞ்சீபுரம், கரூர், சென்னை ஆகிய இடங்களில் சமீப காலம்வரை இத்தொழில் நடைபெற்று வந்தது. ஆனால் காகித ஆலைகள் ஏற்பட்டதன் பயனாக இக்கைக் காகிதத் தொழில் நசித்துவிட்டது.

மீண்டும் புத்துயிர் :

எனவே கைக்காகிதத் தொழில், கதர் கிராமக் கைத்தொழில் கமிஷனின் சார்பில் புத்துயிர்பெற்று வருகிறது. 2-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாடெங்கிலும் உள்ள 120-உற்பத்தி நிலையங்களின் மூலமாக சுமார் 1-கோடி ரூபாய் மதிப்புள்ள 5,041 டன் காகிதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதன் உற்பத்தி சுமார் ரூ. 1.62 கோடி பெருமானமுள்ள 8231-டன் காகிதங்களாக உயர்ந்து உள்ளன. இத்திட்டக் காலத்தில் கைக்காகிதத்தின் விற்பனை ரூ. 1.45 கோடியாகும். இத்தொழிலின் மூலம் சுமார் 3,773 முழுநேர ஊழியர்களும், 710 பகுதிநேர ஊழியர்களும் வேலை வாய்ப்புப் பெற்று வருகிறார்கள்.

உற்பத்தியும் — முன்னேற்றமும்:

கைக்காகித முறையிலேயே டைப் செய்வதற்கான மெல்லிய காகிதங்கள், உயர்ந்த நேர்த்தியான பாண்டு பேப்பர்கள், நீடித்த நாட்களுக்குப் பயன்படுத்தத் தகுந்த கெட்டியான காகித தினுசுகள், போட்டோ ஆல்பங்கள் ஒட்டுவதற்கு தேவையான கருப்புக் காகித ரகங்கள் மற்றும் சாதாரண உபயோகத்திற்குத் தேவையான காகிதங்கள், அட்டைகள் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. காகிதம் தயாரிக்கும்போது அதன் மூலப் பொருட்களில் உள்ள மாவு, பச்சைச் சத்துக்களை

வெளியேற்றக்கூடிய சில எளிய ரசாயன முறைகளும் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன.

ஆலைகளும்—சோலைகளும்:

இதனைவிடுத்து பெரிய பெரிய காகித ஆலைகளை நாட்டில் நிர்மாணிக்க முயலுவதால் அதற்குத் தேவையான மூலப் பொருட்களை நமது பற்றுக்குறை வன வளத்தின் மூலமாகவே பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வனவளம் பாதிக்கப் பட்டால் நாட்டில் பல்வேறு இன்னல்கள் ஒன்றையடுத்து ஒன்றாகத் தலைதூக்கும். தற்சமயம் பருவகாலத்தில் மழையின் மைக்குகூட வனவளப் பற்றுக்குறைவையே அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். மேலும் தேவையான மூலதனமும், இயந்திர சாதனங்களும் நம்மிடம் இல்லை. அத்துடன் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்குண்டு இருக்கும் லட்சக்கணக்கான மக்கட்தொகைக்கு வழிவகுப்பதும் அவசியமாகிறது. நாட்டின் செல்வத்தைப் பாதுகாப்பதும் இன்றியமையாததாகிறது.

உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நமது நாட்டவர் மிகக்குறைந்த அளவே காகிதம் உபயோகிக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. அதாவது அமெரிக்காவில் ஒரு நபர் ஆண்டொன்றுக்கு 392 பவுண்டு காகிதங்களையே உபயோகித்து வரும் சமயம் நமது தேவை சராசரி $1\frac{1}{2}$ பவுண்டு காகிதத்தின் அளவிலேயே நின்றுவிடுகிறது என்றால் இந்த மிகக்குறைந்த அளவுகூட நம் நாட்டில் தயாரித்து தன்னிறைவுபெற இயலாத வாறு $\frac{1}{3}$-பாகம் இறக்குமதி செய்தே வருகிறோம். எனவே நமது நாட்டின் பொருளாதாரமும், மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர இம்மாதிரியான அத்தியாவசியத்துறைகள் யாவற்றிலும் கருத்து செலுத்தித் தன்னிறைவுபெற முயலவேண்டுவது அவசியமாகும்.

பொருட்காட்சிக் கலையரங்கில் கைக்காகிதம்:

மகாமகப் பொருட்காட்சிக் கலையரங்கில் கைக் காகிதம் செய்யும்முறை மக்களுக்கு விளக்கிக் காண்பிக்கப்பட்டது. கழிவையும் செல்வமாக்கும் இந்த ஏற்பாட்டைக் கண்ணுறும் கிராமமக்கள் கைக்காகிதத்தின் செயல் முறையையும், பயன் வழியினையும் கண்டுகளித்தனர். காந்திநிகேதன் ஆஸ்ரமம் தே. கல்லுப்பட்டியின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த இந்த அரங்கத்தில் கைக்காகிதத்தின் உறுதித்தன்மையை எடுத்துக் காட்டத்தகுந்த முறையில் காகிதம் தாங்கிக்கொண்டிருந்த 10-

5 (x9B)·2111 7k 31p7K8
158050

கிலோ எடையுள்ள இழுப்பு சக்தி காண்போரின் கவனத்தைக் கவர்ந்தது.

ஆஸ்ரமத்தின் சார்பில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 16,500 ரூபாய் மதிப்புள்ள காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. 15-ஊழியர்கள் இத்துறையில் முழுநேரப் பணிபுரிந்து வருகின்றனர் கள். பாரதமெங்கிலுமுள்ள 276 உற்பத்தி நிலையங்களின்மூலம் சுமார் 5-ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. 1964-65-ம் ஆண்டு 1788 மெட்ரிக் டன் எடையுள்ள ரூ. 35.50 லட்சம் மதிப்புள்ளதாக இருந்த கைக்காகிம் உற்பத்தி 1965—66-ல் 1960 டன்னாக ரூ. 38.68 லட்சம் பெருமானமுள்ளதாக அதிகரித்துள்ளது; அதாவது 10 சதம் உயர்ந்துள்ளது.



கதர்

மனிதனது மதிநுட்பத்தால் வளர்ந்து வரும் எத்தனையோ மதிப்புடைத் தொழில்கள் உலகில் உள்ளன. வருவாய் அதிகம் உள்ள தொழில்கள் இருக்கினறன; நாகரீகமரன தொழில்கள் இருக்கின்றன; விஞ்ஞானக் கண்டுபிடிப்பினுல் அவ்வக்கால வண்ணங்களுக்குத் தக்கபடி உருவான புதுமையான தொழில்கள்பல உள்ளன. அத்தகைய சிறப்பும் செல்வாக்கும் தரவல்ல தொழில்களையெல்லாம் விட்டு விட்டு கைராட்டையால் நூல் நூற்கும் கதர்த்தொழிலைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்தது ஏன் என்று சிந்திப்பது அவசியமாகும்.

அற்பமான தொழிலாக இருந்தாலும் அபரிமிதமான ஆதாயம் இருக்குமாளுல் அந்தத்தொழில் உயர்வான தொழிலாகப் பாராட்டப்படும்; வளர்க்கப்படும்; இது உலக இயல்பு, தொழில்முறைப் பழக்கம்.

ஆனுல் காந்தியடிகள் வருவாய் அதிகமில்லாத கைராட்டைத் தொழிலை—கதர்த் தொழிலைத் தன் சிந்தை விரும்பிப் போற்றி வந்தது ஆராயத் தகுந்த அம்சமே!

ஆடையின் மகிமை :

அந்தஸ்தின் அணிகலனுகவும், ஆடம்பரத்தின் வித்தாகவும், எளிமையின் இருப்பிடமாகவும் இயல்பினை எடுத்தியம்பக் கூடியதாகவும் இருப்பது ஆடை. பிறப்பு முதல் இறப்பு வரை மனிதனுடன் நெறுக்கமான தொடர்புடையது ஆடை. அதிலும் குறிப்பாக நமது நாட்டு ஆடையின் சரித்திரம் எண்ணிலடங்கா அத்தியாயங்களைக்கொண்டது.

சிந்து சமவெளி நாகரிகம் சிறப்புப் பெற்றமை ஆடையால்!
ஆங்கிலேயரைக் கவர்ந்து நாட்டின்மேல் ஆசைப்பட
வைத்தது ஆடை!

அடிமைத் தனத்தை ஆணித்தரமாக்கியதும் ஆடை!
ஆங்கிலேயருக்கு ஆதாயகரமாக விளங்கியதும் ஆடை!
அவர்கள் தம் ஆட்சியை அஸ்தமிக்கச் செய்ததும் ஆடை!
சுதந்திர உணர்ச்சியைச் தூண்டிவிட்டதும் ஆடை!
மகாத்மா காந்தியின் மாபெரும் கருவியும் இந்த ஆடையே!

எனவேதான் காந்தியடிகள் ஆடைக்கலையினைப்பெரிதும் போற்றி, வளர்த்துப் பெருமையுடையதாக்க முயன்றார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் சின்னமாகத் திகழ்ந்த இராட்டினம் தான் நாட்டுமக்களின் கௌரவத்தைக் காப்பாற்றவல்லது எனப் பறைசாற்றினர்.

வளர்ச்சிப் பாதை :

இவ்வாறு சிறப்புமிக்க ஆடைக்கலை, கைராட்டை, மகன் ராட்டை, அம்பர் ராட்டை என நூற்புக் கருவிகளில் பலப்பல வளர்ச்சிபெற்று உற்பத்தியிலும், தரத்திலும் உன்னத நிலைக்கு உயர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. 1965-ம் மாடல் அம்பர் இராட்டை என்னும் புதிய கண்டுபிடிப்பின்மூலம் கிராமப்பெண் மணிகள் ரூ. 1—50 முதல் 2—00 வரை தினமும் சம்பாதிக்கக் கூடிய அளவில் கலையும் நுணுக்கங்களும் வளர்ந்து எளிதாக்கப் பட்டுள்ளன.

நெசவிலும் பலமாறுதல்கள் டேக்-அப் மோசன் என்று கூறப்படும் தானே துணியைச் சுற்றிக்கொள்ளும் அமைப்புப் பொருத்தப்பட்ட தறி மாடல்களும், எளிய முறையில் சிரமமின்றி பாவுக்கு கஞ்சிபோடத் தகுந்த "சிட்டத்திற்கு கஞ்சி போடும் முறை" (**Hank Sizing**)களும் கிராமங்களில் புகுத்தப்படுதலின் பயனாக உற்பத்தியாளர்களின் உற்பத்தி பெருகவும், வருவாய் அதிகரிக்கச் செய்யவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படு கின்றன.

தமிழகத்தில் கதர்ப்பணி புரிந்துவரும் ஸ்தாபனங்களுள் தமிழ்நாடு சர்வோதய சங்கம் ஆண்டொன்றுக்குச் சுமார் 2-கோடி பெருமானமுள்ள கதர்த் துணியை உற்பத்தி செய்து சுமார் $1\frac{3}{4}$-கோடி பெருமானமுள்ள துணிகளை விற்பனைசெய்து வருகிறது. கதர்ப்பணியைச் சார்ந்த நூற்பு, சாயம், அச்சு, சலவை, தச்சு போன்ற பிறவேலைகளிலும், ஆங்காங்கே கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் வேலை வாய்ப்பினையும், வாழ்க் கைக்கூலியையும் கொடுத்து நிர்மாணப் பணிபுரிந்து வருகிறது.

இதைத் தவிர பாரதமெங்கிலுமுள்ள 15 மாநில அரசு ஆயங்கள், 827 கூட்டுறவுக்கதர் சொசைட்டிகள், 1037 பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்கள், மற்றும் மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் உள்ள 22 நிலையங்கள் ஆகியவைகளின் மூலம் கதர்ப்பணி பரவலாக நடத்தப்பட்டு வருகிறது.

கதர் உற்பத்தியும் — விற்பனையும்:

இந்த அனைத்துக் குழுக்களின் மூலமாக 1964—65-ம் ஆண்டு ரூ. 20.98 கோடி மதிப்புள்ள 8.06 கோடி சதுர மீட்டர்கள் கதர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது 1965-66-ல் ரூ. 26.8 கோடி மதிப்புள்ள 8.48 கோடி சதுர மீட்டராக உயர்ந்துள்ளது. இதில் 31.52 லட்சம் சதுர மீட்டர்கள் சுயதேவைக் கதராக இலவச நெசவுத் திட்டத்தின்கீழ் நெசவு செய்து துணியாக வழங்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் 1964—65-ம் ஆண்டு ரூ. 21.12 கோடி பெருமானமுள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் 65—66-ல் ரூ. 19.67 கோடியாகக் குறைந்துள்ளது. ஆனால் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் 1964-65ம் ஆண்டு 1.23 கோடியாக இருந்த ஆண்டு விற்பனை 65—66-ல் 1.41 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். இத்தொழில்களின் மூலம் 65—66-ம் ஆண்டு 17.3 லட்சம் நூற்போர்களும், 1.35 லட்சம் நெசவாளர்களும், 0.47 லட்சம் இதர ஊழியர்களும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். இவர்கள் முறையே ரூ. 100, ரூ. 380, ரூ. 415 சராசரி வருட வருவாய்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு சர்வோதய சங்கம் வருடவாரியாகச் செய்து வரும் உற்பத்தி—விற்பனை பின்வருமாறு:

வருடம்	கதர் உற்பத்தி ரூ.	கதர் விற்பனை ரூ.
1956—57	58,10,384	60,94,660
1957—58	69,05,998	69,05,794
1958—59	77,69,600	80,17,770
1959—60	1,04,10,995	93,57,709
1960—61	1,07,50,838	1,13,92,589
1961—62	1,32,76,558	1,19,93,086
1962—63	1,63,18,269	1,31,98,964
1963—64	1,28,08,473	1,38,17,536
1964—65	1,43,63,434	1,23,70,165
1965—66	1,64,10,072	1,41,92,464
1966—67	1,87,04,809	1,55,32,541

வளர்ச்சிப் பாதையில் அம்பர் இராட்டை!

1948-ம் ஆண்டு நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏகாம்பரன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அம்பர் இராட்டை மென்மேலும் வளர்ந்து, சிறப்புற்று பலருக்குப் பயன்படும் வண்ணமும், ஏழ்மையைப் போக்கும் விதத்திலும் வளர்ச்சி யடைந்து கொண்டே வருகிறது. எனவே, அதன் பல்வேறு வளர்ச்சி நிலைகளைச் சித்தரிக்கும் முறையிலும், இதன் வளர்ச்சி யால் மக்கள் பயன்படும், நுகரும் அளவினையும் பொதுமக்களுக்கு எடுத்துக்கூறும் ஒரு அம்சமாகவே வளர்ச்சிப் பாதையில் அம்பர் இராட்டை அரங்கம் அமைக்கப்பட்டது. இதில்இடம்பெற்றிருந்த பல்வேறு இராட்டினங்களுள் ஒரு கதிர், 2-கதிர், 3-கதிர் மற்றும் 6-கதிர் இராட்டைகளும் இடம்பெற்றன.

1965-ம் மாடல் உலோக ராட்டையும் அத்துடன் இணைந்த முன்னேற்றமடைந்த, பஞ்சு உடைப்புக் கருவிகள். மின்விசைச் சாதனங்கள், பட்டை போடும் சாதனங்கள் முதலியனவும் இடம்பெற்றன. பரீட்சார்த்தமான இந்தத் திட்டம்

தமிழகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 1500 இராட்டைகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. இதன் வேலைத் திறன் முன்னவைகளிவிடச் சுற்றுக்கூடுதலாக உள்ளதால் நிறைந்த வருமானம் பெறுகின்றனர். அவரவர்களுக்குக் குறிப்பிட்ட வேலைகள் ஒதுக்கப்பட்டு விடுகின்றனவாதலால் ஒரு வேலையில் தமது முழுத்திறமையையும், முயற்சியையும் காட்டி சிரமமின்றிப் பணிபுரிய இயலுகிறது.

மூலதனமும்—வருவாயும் :

1965-ம் மாடல் அம்பர் இராட்டை, சாதாரணக் கைராட்டை மற்றும் அம்பர் இராட்டைகளினின்றும் எவ்வகையில் மாறுபட்டு சிறப்பம்சங்கள் பொருந்தியுள்ளன என்பதை அட்டவணை எடுத்துக்காட்டும்.

விபரம்	கை ராட்டை	அம்பர் ராட்டை	1965-ம் மாடல் இராட்டை
இராட்டையின் விலை (பஞ்சு உடைக்கும் பட்டைபோடும் கருவி உட்பட) ரூ.	15—00	160—00	282—00
1-நாளில் உற்பத்திச் சிட்டம்	2.5	8	20
வேலை வாய்ப்பு நபர்	1	1.75	1.5
நூற்பின்மூலம் கிடைக்கும் கூலி ரூ. (1-நாளில்)	0—50	1—00	1—50 முதல் 2—00

கடந்த 65—66-ம் ஆண்டு 368 இராட்டைகள் வினியோகிக்கப்பட்டதில் சராசரி 1 மனித நாளில் **(Man hour)**ரூ. 1.77 கூலி பெற்றுள்ளனர். 66—67-ல் 1120 இராட்டைகள் வினியோகிக்கப்பட்டுள்ளதில் சராசரி 1-மனித நாளுக்கு ரூ. 1—58 கூலிபெற்றுள்ளனர்.

அன்றும்—இன்றும் :

தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் இதுவரை வினியோகம் செய்யப்பட்டுள்ள இராட்டைகளின் விபரம் பின் வருமாறு :

1956-முதல் 66-வரை 10-ஆண்டுகளில்

4-கதிர் அம்பர் இராட்டை ...	13,751
4-கதிர் கூட்டு இராட்டை ...	992
6-கதிர் அம்பர் இராட்டை ...	10,354
1965-ம் மாடல் கோயமுத்தூர் மாடல் இராட்டை...	372
மொத்தம்...	25,469

★ கதர் நெசவு அரங்கம்! ★

பல்வேறு ரகங்கள் நெசவு செய்யும் முறைகள் பொது மக்கள் பார்வைக்கு கிடைக்கச் செய்யும் முயற்சியாக கோவை மத்திய சர்வோதய சங்கத்தின் ஊத்துக்குளி கிளையின் மூலம் கதர் ரகங்களில் டிசைன் மற்றும் பெட்ஷீட்கள் நெசவு செய்யும் தறி கண் காட்சியில் இடம் பெற்றிருந்தது. 12-மிதிகளைக் கொண்ட இந்தத்தறியில் உற்பத்தியான போர்வைகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது.



பட்டு நெசவு.

பட்டுப் பூச்சியிலிருந்து பட்டு நூல் தயாரிக்கும் விதம், நூல் இழைத்தல், கண்டு சுற்றுதல், நெசவு நெய்தல்போன்ற வேலைகள் கண்காட்சியில் இடம்பெற்றன. பட்டு நூலிற்குச்சாய மிடுதல், ஈரிழையாக முறுக்குதல், கோர்வை நெசவு முதலியவை காண்போரின் கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்திருந்தன. த. நா. ச. சங்கத்தின்மூலம் ஆண்டொன்றுக்குச் சுமார் பத்து லட்சம் மதிப்புள்ள கதர்ப்பட்டு உற்பத்திசெய்து விற்பனையும் செய்யப்படுகிறது.

அகிம்சாப் பட்டு :

பட்டுப் பூச்சிகளைக் கொல்லாமலேயே தயாரிக்கப்படும் அகிம்சாப்பட்டு நெசவும் கண்காட்சியில் சிறப்பான அம்சமாகத் திகழ்ந்தது. கும்பகோணம் பட்டு உற்பத்திக் கிளையின்மூலமாக இந்த ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கம்பளி நெசவு :

பாரம்பரியமாகவே சுயபலத்தின்மூலம் இயங்கிவரும் ஒரு சில தொழில்களுள் கம்பளி நெசவு முக்கிய இடத்தை வகிக்கிறது. வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரத்தில் வளர்க்கப்படும் ஒருவகைச் செம்மறி ஆடுகளின் உரோமங்களின் மூலம் தாங்களே நூல் நூற்று. பாவு போட்டு, தகுந்த பசை கொடுத்து, நெசவுசெய்து, விற்பனையும்செய்து வருகின்றனர். கம்பளி வேண்டும் கிராம மக்கள் விலைக்கு நேரடியாக நெசவாளர்களிடமே வாங்கிக்கொள்கிறார்கள். தம்மிடம் உள்ள ஆட்டு ரோமத்தினைக் கொடுத்துவிட்டு நெசவுக் கூலியையும் கொடுத்துவிட்டுக் கம்பளி பெற்றுச்செல்லுவதும் உண்டு. சிலர் சிறப்பான உரோமங்களைச் சேகரித்து பிரத்தியேகமாக நெசவு செய்துதரக் கோருவதும் உண்டு.

இந்தச் செய்கலை வல்லுனர்கள் தம் வேலை, தொழிலுக்கான கருவிகளுக்குக்கூட அன்னியர்களை எதிர்பார்ப்பதில்லை. உள்ளூர்த் தச்சர்களைக்கொண்டே செய்விக்கத்தக்க (Simple) சுலபமான சாதனங்களையே கையாளுகின்றனர்



வடஆற்காடு மாவட்ட சர்வோதய சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த இவ்வரங்கம் ஒரு "பூரண சுயதேவைத் திட்டச் செய்முறை விளக்க அரங்கம்" ஆகத் திகழ்ந்தது என்று கூறினுல் மிகையல்ல. நாடெங்கிலும் ஆண்டொன்றுக்குச் சுமார் 70-லட்சம் சதுர மீட்டர் கதர்க்கம்பளி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகி வருகிறது.

கதர்க் குடும்பம்!

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் விற்பனைக் கிளையின் சார்பில் நிறுவப்பெற்றிருந்த கதர் விற்பனை அரங்கம் காட்சிக்கு வருவோரை வரவேற்கும் வகையில் கலையரங்கில் மையப்பகுதியில் எடுப்பாக அமைக்கப்பட்டிருந்தது. பல்வேறு விதவிதமான பருத்தி, பட்டு, கம்பளி ஆடைகளும், வேஷ்டி, துண்டு சேலை ரகங்களும், இடம்பெற்றிருந்தன. குடும்பத்தின் நபர்களுக்குத் தேவையான எல்லாவித ஆடைகளும் விற்பனையில் இடம்பெற்றுள்ளதை விளக்கும் "சர்வோதயக் குடும்பம்" காண்போரின் கருத்திலும், மனதிலும் நீங்கா இடம்பெற்றிருந்தது. உதாரணமாக ஒன்றிரண்டு குறிப்பிடுதல் பொருத்தமாகும்,

குடந்தை, பணதூர உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர், **K. M.** கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியுள்ள கருத்தினை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

"கண்காட்சி உண்மையிலேயே கண்காட்சியாக இருக்கிறது. இவ்விடத்தில் துப்புரவும், சாந்தமும் தென்படுகிறது எல்லாக் கைத்தொழில்களும் மேன்மையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன. எல்லாவற்றையும் சுருக்கமாகக் காட்டுவதுபோல் இங்கு இருக்கும் சர்வோதயக் குடும்பம் என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது"

(ஒப்பம்). **K. M. கிருஷ்ணமூர்த்தி.**

மற்றொரு சகோதரியாரின் கருத்து பின்வருமாறு:—

இங்கு நிறுவியிருந்த சர்வோதயக் காட்சிகளுள் மிகவும் எளிமையாகவும், கருவூலமாகவும், எடுத்துக் காட்டாகவும் விளங்கியுள்ளது சர்வோதயக் குடும்ப அமைப்பு. இதை அமைந்தவர்களுக்கு எமது மனங் கனிந்த அன்பு வாழ்த்துக்கள்.

—பூந்தோட்டம்.

உண்ணு எண்ணெயும்,
சோப்புத் தொழிலும்!

மனிதனுக்குத் தேவையானதும், மற்ற தானியவகைகளின்மூலம் கிடைக்க இயலாததுமான ஊட்டச்சத்துப் பொருட்கள் எண்ணெய்களின் மூலமாகவே கிடைத்து வருகின்றன. மற்ற உணவு வகைகளில் உள்ளதைவிட எண்ணெயில் உள்ள கொழுப்புச் சத்து $2\frac{1}{2}$ மடங்கு அதிக கலோரிகள் உஷ்ணம் தரக்கூடியதாக உள்ளன. எனவே $2\frac{1}{2}$ மடங்கு கூடுதலான ஆற்றல் அளிப்பவைகளாகவும் இந்தச் சத்துப் பொருட்கள் திகழுகின்றன.

எண்ணெய் வளமும், தேவையின் அளவும் :

1980 வாக்கில் நம் நாட்டின் ஜனத்தொகை 60-கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உணவுக்காகத் தேவைப்படும் எண்ணெயும் சுமார் 36-லட்சம் டன்னுக உயரும் என்று எதிர்பார்க்கலாம். இதே அளவிற்கு சோப்பு, பெயிண்டுகள், வார்னிஷ் போன்ற சாமான்களின் தேவையும் அதிகரிக்கும். இவைகளைத் தயாரிப்பதற்கும் எண்ணெய்கள் தேவைப்படுகின்றன எனவே இந்த இதர தேவைகளின் அளவும் இன்னும் 12-ஆண்டுகளில் 45 லட்சம் டன்களாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். குறிப்பாக சோப்புத் தயாரிப்பதற்காக மட்டிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் தேவை 1,60,000 டன்னுக இருந்தது.

சோப்பு செலவு 1980-ல் 7,40,000 டன்னுக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 1980-ல் நமது எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய சுமார் 150 லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் ஆண்டொன்றுக்கு தேவைப்படும். இவ்வளவையும் விளைவிப்பதற்குச் சுமார் 5.3 கோடி ஏக்கர்கள் தேவைப்படும். அதாவது நமது நாட்டிலுள்ள மொத்த நிலத்தில் 14% நிலத்தில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யவேண்டி ஏற்படும்.

இன்றுள்ள நிலையில் உணவுப் பொருள்களுக்கான விளை நிலமே பற்றுக்குறையாக இருந்து வருகிறது. இதனை மேலும் குறைப்பது அல்லது எண்ணெய் வித்துக்களை விளைவிப்பதற்காக ஒதுக்குவது இயலாத காரியம். எனவேதான் உணவுக்கு உதவாத எண்ணெய் வித்துக்களைச் சேகரிப்பதும், எண்ணெய் எடுத்து சோப்பு, வார்னிஷ் போன்ற பொருட்கள் தயாரிப்ப தற்கு உபயோகப்படுத்துவதும் அத்யாவசியமான காரியமா கிறது. தவிரவும் ஒரு மனிதனுக்குச் சராசரி 1-நாளில் 2-முதல் 3-அவுன்ஸ் கொழுப்புப் பொருள் தேவையென உணவுப் பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். ஆனால் நமக்குக் கிடைத்து வருவதோ சராசரி .35 அவுன்ஸ் கொழுப்புப் பொருட் களேயாகும். எனவே எண்ணெய் போன்ற கொழுப்புப் பொருள் பற்றுக்குறையாகவே இருந்து வருகிறது. ஆதலால் உணவுக்கு உதவும் எண்ணெய்களின் மூலம் சோப்பு செய்வதைத்தவிர்த்து உண்ணா எண்ணெய்களின்மூலம் சோப்பு செய்ய வேண்டும்.

இதனால் நாட்டில் வீணாகும் செல்வம் பயன்படுத்தப்படு கிறது. உணவுப் பொருட்களுக்கான நெருக்கடி குறைகிறது. எண்ணெய் வித்துக்கள் சேகரிப்பதின்மூலம் **Seasonal Employment** அளிக்க முடிகிறது. தேசீயச் செல்வம் பாதுகாக்கப்படு கிறது.

உற்பத்தியும், முன்னேற்றமும் :

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 1.12 கோடி மதிப்புள்ள 83.72 லட்சம் கிலோகிராம் சோப்பு தயாரிக் கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதன் வளர்ச்சி ரூ. 3.22 கோடி மதிப்புள்ள 220.16 லட்சம் கிலோ கிராம்களாக உயர்ந்தது. சற்றேறக் குறைய 300 சதம் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத் தகுந்த அம்சமாகும். இத் தொழிலின் மூலம் நாடெங்கிலும் 2,218 முழுநேரப் பணியாளர்களும், 9,609 பகுதிநேரப் பணியாளர் களும் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆண்டுவாரியாகக் கணக்கிட்டால் அகில இந்திய ரீதியில் சோப்பு உற்பத்தியின் அளவில், நல்ல முன்னேற்றம் கண்டுள் ளதை அறியலாம். குறிப்பாக 1961—62-ல் ரூ. 40.54 லட்சம் மதிப்புள்ள 30.44 லட்சம் கிலோவாகயிருந்த சோப்பு உற்பத்தி

1965—66-ல் ரூ. 95.89 லட்சம் மதிப்புள்ள 58.14 லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் தற்சமயம் ஆண்டொன்றுக்குச் சுமார் 12-லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சோப்பு உற்பத்திசெய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்துக்கள் :

1964—65-ல் ரூ. 19.59 லட்சம் மதிப்புள்ள 70.69 லட்சம் கிலோகிராம் எண்ணெய் வித்துக்கள் சேகரிக்கப்பட்டன. இது 1965—66-ல் ரூ. 47.80 லட்சம் பெறுமானமுள்ள 231.17 லட்சம் கிலோகிராமாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் சுமார் 18.8 லட்சம் மக்கள் **(Seasonal Employment)** சீசன் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

ஆராய்ச்சியும், முன்னேற்றமும் :

(அ) ஒருகிலோ அழுத்தமுள்ள சிறிய செக்கு தயாரிக்கப்பட்டு அதன் உலக்கை நிமிடத்திற்கு 12 தடவைகள் சுற்றுவதாகவும், 6 தடவைகள் சுற்றுவதாகவும் தயாரித்து வெவ்வேறு எண்ணெய் வித்துக்களை உபயோகித்து ஆட்டிச் சோதனை செய்யப்பட்டது. இம்மாதிரி வெவ்வேறு வேகங்களில் சுற்றுவதால் கிடைக்கும் எண்ணெயின் அளவு பாதிக்கப்படவில்லை.

(ஆ) வேப்ப முத்துக்களின் ஓடுகளை உடைத்து முத்துக்களைத் தனித்தனியே பிரிக்கும் கருவி தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் இருந்து வருகிறது.

(இ) 50 டன் அழுத்தமுள்ள **Hydraulic Press** ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு எண்ணெய் பிழிய ஆராய்ச்சி செய்யப்படுகிறது.

(ஈ) **Screw Press** மூலமாகவும் எண்ணெய் பிழிய கருவி தயாரித்து ஆராயப்பட்டு வருகிறது.

கும்பகோணம் மகாமகம் சர்வோதயக் கண் காட்சியில் தஞ்சாவூர் மாவட்ட சர்வோதய சங்கம், கும்பகோணம் சோப்பு உற்பத்திக் கிளையின் மூலம் சோப்பு செய்கலை விளக்கப்பகுதி அமைக்கப்பட்டிருந்தது. செமிபாயில் முறையில் தயாரித்த சோப்பைப் பலகைகளாக வெட்டுதல், தேவையான அளவுக்கு துண்டுகளாக ஆக்குதல், அச்சுப்பதித்தல் **(Stamping)** விற்பனைக்குத் தயாராக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் **(Finishing)** ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பாய் நெசவு!

கிராம மக்களுக்கு வேலே வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தின் அடிப்படையில் பாய் நெசவுபோன்ற எளிய கிராமக் கைத்தொழில்களுக்கும் கதர் கிராமக் கைத்தொழில் கமிஷன் ஊக்கமளித்து அப்பணிகள் சிறக்கவும், விருத்தியடையவும் தேவையான அம்சங்களை ஆராய்ந்து வருகிறது.

ஒருவகைக் கோரைப் புல்லினை பதப்படுத்தி பாதுகாத்து, கைநெசவின்மூலம் விரிப்புக்களாகப் பின்னப்படுகிறது. இக்கலையில் பல்வேறு டிசைன்கள் ஏற்படுத்துதல், பெயர்கள் பொறித்தல் மற்றும் வண்ணவண்ணக் கலர்க் கோரைகளின் மூலமாக பல்வேறு கண்கவர் பாய்களும் நெசவு செய்யப்படுகின்றன. மேலும் ஒற்றைக் கோரை, இரட்டைக் கோரைகள் என வகைப்படுத்திப் பின்னப்பட்டு குறைந்த விலையில் தரமான பொருட்கள் நேர்த்தியான முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது.



மெல்லிய கோரைகளின் மூலமாகத் தயாரிக்கப்படும் பாய் ரகங்கள் நூல் ஜமக்காளங்களுடன் ஒப்பிடும் அளவிற்குச் சிறப்பான அம்சங்கள் பொருந்தியவைகளாகவும் தயார் செய்யப் படுகின்றன.

பொருட்காட்சிக் கலையரங்கில் அமைக்கப்பட்டிருந்த இந்தச் செய்கலை விளக்க அரங்கம் திருச்சி சர்வோதய சங்கத்தின் மாதிரி உற்பத்தி நிலையம் பூங்குடியின் சார்பில் அமைக்கப் பட்டிருந்தது. தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் ஆண்டொன்றுக்குச் சுமார் 10-ஆயிரம் ரூபாய் பெருமானமுள்ள பாய் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

நார்த் தொழில் அரங்கம்!

நாட்டில் பரவலாகக் கிடைத்துவரக் கூடிய வாழை நார், கற்றுளை நார் மற்றும் அந்தந்த இடங்களில் கிடைக்கக்கூடிய சிறு அளவு பல்வேறு கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி விவசாய வேலைகளுக்கும், மக்களின் அன்றுடப் பணிகளுக்கும் தேவையான கயிறுகள், மற்றும் பைகள், கித்தான், விரிப்புகள் முதலியவற்றைச் செய்வதன்மூலம் கிராமவாசிகளுக்குப் பரவலாக வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்னும் அடிப்படையில் கதர் கமிஷன் தனது வேலைத்திட்டங்களுள் ஒன்றுக நார்த் தொழிலையும் தேர்ந்தெடுத்துள்ளது. இத்தொழில் வெகு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதாகையால் இதில் ஈடுபட்டுள்ளோருக்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் அளித்து வருகிறது. இத்தொழிலின் முன்னேற்றத்திற்கான பல்வேறு வழி வகைகளையும் ஆராய்ந்து வருகிறது.

பொட்டலம் கட்டுதல் போன்ற சாதாரண உபயோகங்கட்குப் பயன்பட்டுவந்த சணல் கயிறுகளுக்குப்பதிலாக வாழை நாரில் இருந்து தயார் செய்யும் கயிறுகளைப் பயன்படுத்துவதால் சணலின் பற்றுக்குறை தவிர்க்கப்படுகிறது. மற்றும் எந்தெந்த காரியங்களில் இதனைப் பயன்படுத்த இயலுமோ அவைகட்கு நாரினுலான கயிறுகளையும், சாதனங்களையும் பயன்படுத்துவது பரவலான வேலை வாய்ப்பிற்கு வழிகோலும்.

புத்துயிர் பெற்றுவரும் இத்துறையின் மூலம் 2-வது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நாடெங்கிலும் 0.14 கோடி பெறுமானமுள்ள பொருட்களே உற்பத்தியாக்கப்பட்டன. ஆனுல் 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவ்வுற்பத்தி ரூ. 2.87 கோடியாக உயர்ந்தது. வருட வாரியாகப் பார்த்தால் 65–66-ல் உற்பத்தி ரூ. 74.91 லட்சமாக இருந்து, 66–67-ல் 81.55 லட்சமாக உயர்ந்துமுள்ளது என அறிகிறோம். இத்தொழில் குறிப்பாக பஞ்சாப், மைசூர், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தொழிலின்மூலம் நாடெங்கிலும் 10,967 முழு

நேர ஊழியர்களும், 11,327 பகுதிநேர ஊழியர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.

பொருட்காட்சி அரங்கில் நார்த் தொழில் :

இத்தொழிலின் சிறப்பினையும், முக்கியத்துவத்தையும் பொதுமக்களுக்கு விளங்கும் வகையில் கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்திலுள்ள கடலூர் பஞ்சாயத்து கூட்டுறவு சங்கத்தின் சார்பில் செய்கலை விளக்க அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. வாழை நாரினைப் பக்குவப்படுத்துதல், கயிறு திரித்தல், பல்வேறு உபயோகப் பொருட்களாக மாற்றும் முறைகள், ஆசனப்பாய்களாக நெசவு செய்தல் முதலிய வேலைகள் செய்கலை மூலம் விளக்கப்பட்டன. இத்தொழில் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்தால் வெட்டி வீழ்த்தி வீணாக்கப்படும் வாழை மரங்களும் கற்றாளை நாரும் நல்ல முறையில் பயன்படுத்தப்பட இயலும்.

இதன்மூலம் மனிதர்களின் அன்றாட உபயோகங்களுக்கு தேவைப்படும் சிறு பொட்டலங்கள் கட்டும் கயிறுமுதல் தண்ணீர் இறைக்கும் கொச்சங்கள் வரை பல்வேறு தரப்பட்ட கயிறுகளை எளிய முறையில் குறைந்த செலவில் விணாகும் செல்வங்களின்மூலம் தயாரித்தலைப் பணியாகக் கொண்டு பல ஸ்தாபனங்கள் இயங்கி வருகின்றன. தனி நபர்களும் பரவலாக ஆங்காங்கே ஈடுபட்டு வருவதனையும் காணலாம்.

இத்துறையில் வழக்கமாக முறுக்கப்படும் கயிறுகளுக்கான மூலப் பொருட்களைத் தவிர, வீணாக்கப்படும் எரிக்கஞ் செடியின் தண்டு, வாழை நார் போன்ற கழிவுப் பொருட்களின் மூலம் சிறு ரகக்கயிறுகள் திரிப்பதைச் சித்தரிக்கும் வண்ணம் ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது.

இதில் காட்சிக்காக வைக்கப்பட்ட சிறு இயந்திரத்தின் மூலம் உற்பத்தியாகும் மெல்லிய கயிறுகொண்டு பல்வேறு வண்ணவண்ணப் பைகள், ஆசனங்கள், கார் பெட்டுக்கள், பிரஷ்கள் மற்றும் மாலைகள், சவுரிகள் முதலியனவும் தயாரித்துக் காண்பிக்கப்பட்டது.

வாழை மரத்தின் மற்றையப் பாகங்கள் யாவுமே பயன் படுத்தப்பட்டுவரும் நிலையில் முற்றிய மரங்களின் தண்டுகள் சில சமயங்களில் அபரிமிதமானால் கழிவாக்கப்பட்டு வந்தன. ஆனால் இவ்வேற்பாட்டின் மூலம் இனி அத்தகைய வாழைத் தண்டுகள் கூட கழிவாக்கப்படாமல் பயனளிக்கும் வகையில் உபயோகப் பொருளாக மாற்ற இயலும் என்பதனை இந்நார்த் தொழில் அரங்கம் எடுத்துக் கூறுவதாக இருந்தது.

தஞ்சை மாவட்டித்தின் பெரும் பகுதிகளில் வாழைத் தோட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. அத்தகைய இடங்களின் இம்மாதிரியான நார்த் தொழில்கள் ஆரம்பிக்கப்பட இக்கண் காட்சி அரங்கம் உதவும் எனத்திடமாக நம்பலாம்.

கண்கவரும் கைவண்ண

நெட்டித் தொழில்

அரங்கம்!

சங்க கால இலக்கியங்களிலும், அதுபோன்ற பழம்பெரும் நூல்களிலும் பெருமைபெற்றிருக்கும் நெட்டித் தொழில் இந்தியக் கலாச்சாரத்தையும், நாகரிகச் சின்னங்களையும் வெளிநாடுகளில் பறைசாற்றுவனவாகத் திகழ்ந்து வருகின்றன.



சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இதன்புகழ் பரவி வருவதால் இதன் சிறப்பும் பெருமையும் தொன்மையானவைகளுள் முதன்மையானதாகக்கூடக் கூறலாம்.

நெட்டி என்னும் ஒருவகைக் கட்டையைச் சதுரித்து பல விதமான கட்டடங்களின் மாதிரித் தோற்றங்கள், சிற்பங்கள், கோவில்கள், கடவுளரின் உருவங்கள், மாட மாளிகைகளின் வடிவங்கள் செய்யப்படுகின்றன. இவை பார்வைக்கு அழகாகவும், அற்புதமான படைப்புக்களாகவும் தோன்றுகின்றன.

ஆதலால் இதனைச் செய்வதற்கு எவ்வளவு கலைநுணுக்கம் தேவைப்படும்? என்பது சொல்லாமலேயே விளங்கக்கூடிய ஒன்றாகும்.

இக்கலை பாரதத்தின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுவதில்லை. தமிழகத்தில் குறிப்பாக தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு மாவட்டங்களிலேயே காணப்படுகிறது. ஏனெனில் நெட்டி என்னும் தாவரம் நீர் நிலைகள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் தானாகவே உற்பத்தியாகும் ஒருவகைக் கொடியினத்தைச் சேர்ந்தது. இதற்கு கிடை, சடை வெண்டு, தக்கை என்ற வேறு பெயர்களும் உண்டு. ஆங்கிலத்தில் **Pith** என்று கூறப்படுகிறது.

இப்போது வெளி நாட்டினர் இப் பொருட்களை மிகவும் விரும்பி வாங்குவதால் இது அன்னியச் செலாவணி சம்பாதிக்கும் ஒரு அம்சமாகத் திகழுகிறது. எனவே மாநில, மத்திய அரசுகள் இத்தொழிலை முன்னேற்றப் பாடுபட்டு வருகிறார்கள். விற்பனை ஏற்பாடுகளையும் அரசினரே நேரடியாகச் செய்ய முனைந்திருப்பதிலிருந்தும் இதன் பெருமையை உணரலாம்.

மிகவும் இலேசான எடையுள்ளதாகவும் மிருதுவான அமைப்பு உடையதாகவும் உள்ள இந்தக் கட்டையின் மூலம் விரும்பிய பொருட்களைப் பல்வேறு தினுசுகளாகச் செய்ய இயலுகிறது.

தாமரை, அல்லி, ரோஜாப் பூ, முல்லைப் பூ போன்ற விரும்பிய பூக்களின் மாதிரிகளையும், பல்வேறு வகையான செடிக் கொத்து, இலைக் கொத்து, பூச்சரங்கள் முதலியனவும் செய்ய இயலுகின்றன. பல்வேறு வண்ணங்களையும் எளிதில் ஏற்றுக் கொள்ளுகிறது.

இத் தொழிலில் சுமார் 30 ஆண்டுகாலம் அனுபவம் பெற்றவரும், வட ஆற்காடு மாவட்டம் திருப்பனங்காட்டைச் சேர்ந்த திரு. N. சாரங்கபாணி அவர்களும், கும்பகோணத்தைச் சேர்ந்த வித்துவான் திரு. சாமிசிவப்பிரகாசம் அவர்களும் தனித் தனி அரங்கங்களை அமைத்துச் செய்முறைகளை விளக்கிக் கூறினார்கள்.

இக்காட்சி காண்போரின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்ததுடன் தமிழ்நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்துவதாகவும் அமைந்திருந்தது.

பணிமனை அரங்கம்!

தமிழ்நாட்டின் கதர்இயக்க வேலைகளின் மூத்த இடமான திருப்பூர் - வீரபாண்டியில் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தின் சார்பில் 1958-ம் ஆண்டுமுதல் இப்பணிமனை **(Work shop)** ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் தலையாய பணி அம்பர் இராட்டை மற்றும் நூற்பு, நெசவுக் கருவிகளை உற்பத்தி செய்வதே.

என்றாலும் பாமர மக்களின் அன்றாடத் தேவைப் பொருட்களும், விவசாயிகளுக்குத் தேவையான கருவிகளையும் உற்பத்தி செய்து மலிவான விலையில் வினியோகிப்பதன் மூலம் கொள்ளை லாபப் போக்கிற்கு ஒரு சவாலாகச் செயல்பட்டு வருகிறது.

அத்துடன் உறுதியானதும், எளிமையானதுமான இரும்பு



மற்றும் மரத்திலான பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. 'ஸ்டீல் பீரோக்கள்' மேஜை, நாற்காலிகள் முதலியவைகளுடன், பூரிப்பலகை, கோட் ஸ்டாண்டு, கெடிகாரக் கட்டைகள், சிறிய ரேக்குகள். ரூல் தடிகள் போன்ற சிறிய சிறிய கருவிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மகாமகம் கண்காட்சிக்கலை அரங்கில் பார்வைக்காகவும், விற்பனைக்காகவும் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் பலரது கண்ணையும் கருத்தினையும் கவர்ந்தன என்பதற்கு, மேலே கூறப்பட்ட தட்டுமுட்டு சாமான்களின் விற்பனை அபரிமிதமான கிராக்கியுடன் நிகழ்ந்ததே சான்றாகும்.

தொழு நோய்த் தடுப்பு அரங்கம்!

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களுள் தொழுநோய் நிவாரணமும் ஒன்ருகும். தொழுநோய் பற்றிய அடிப்படை அம்சங்கள், தடுப்பு முறைகள், நோய் தோன்றுவதற்கான அறிகுறிகள் முதலியவைகள்பற்றி மக்களின் மனதில் நிலவிவரும் தவருன அபிப்பிராயங்களைப் போக்கி நிரந்தர நிவாரணம் நாட்டில் நிலவுவதற்கான ஏற்பாடுகள் செய்யும் முறையிலும் இதற்காக நாட்டில் நடைபெற்றுவரும் அமைதியான இயக்கம் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக்கூறும் முறையிலும் இவ்வரங்கம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்து குஷ்டரோக நிவாரண சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் கும்பகோணம் தூய இருதய ஆண்டவர் தொழு நோய் மருத்துவ மனையின் சார்பில் நடத்தப்பட்ட இந்த அரங்கின்மூலம் பொதுமக்களுக்குப் பல உண்மைகள் வலியுறுத்தப் பட்டன.

தொழுநோய் என்பது க்ஷயரோகம், விஷக் காய்ச்சல் மற்றும் அம்மை போன்ற தொற்று நோய்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த அளவே தொற்றுத் தன்மையுடையது. இது பரம்பரை வியாதியோ, காம வியாதியோ அல்லது தீய ஒழுக்கத்தினுல் ஏற்படக்கூடிய வியாதியோ அல்ல. சாதாரணமாக எல்லா வியாதிகளையும்போல இவ்வியாதியும் எல்லோருக்கும் ஏற்படக்கூடும்; ஏற்பட்டாலும் குணப்படுத்த முடியும். ஆரம்பத்தில் உடலில் சிறு தேமல் போன்ற படைகள், காது தடிப்பு, நரம்புகள் தடித்தல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். ஆரம்ப நிலையில் தகுந்த சிகிச்சை செய்துகொள்ளாவிடில் வியாதி மெதுவாக வளர்ந்து உடல் முழுவதும் பரவி விடும். முக்கியமாக நரம்புகளைப் பாதித்து கைகால்கள் உணர்ச்சியை இழந்து விடும். நரம்புகள் தளர்ந்து குறைகளும், விகாரத் தோற்றமும் ஏற்படும். உணர்ச்சியற்ற அங்கங்களில் வெகுசுலபமாக ரணங்களும், புண்களும் ஏற்படும். நாளாவட்டத்தில் கண் பார்வையும் இழக்க நேரிடும் என்ற உண்மைகளை வலியுறுத்திக் கூறினர்கள்.

அத்துடன் பொதுமக்களுக்கு எளிதில் விளங்கும் வகையில் சலனப் படங்களும் திரையிடப்பட்டன. முதல் உதவி சிகிச்சை, மற்றும் குஷ்டரோக சிகிச்சை செய்முறை முதலியவைகளும் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

சர்வோதய இலக்கிய விற்பனை அரங்கம்!

உலகில் நடைபெற்றுவரும் பல்வேறு இயக்கங்களும் கொள்கைகளும் மக்களுக்கு விளங்க வைக்க வேண்டுமாயின் அதிகப்படியான மக்கள் அதனை கடைப்பிடிக்க வேண்டுமாயின் தீவிரப் பிரச்சாரம் அவசியம். ஆனால் பிரச்சாரத்தின் மூலமாக மட்டும் அனைத்து மக்களையும் குறிப்பிட்ட நேரத்தில் சந்தித்துக் கூறிவிட இயலாது. இதற்கு நேரம், காலம், வசதி, சந்தர்ப்பங்

கள், சூழ்நிலை முதலியவைகள் குறுக்கே நிற்கலாம். எனவே அவரவர்களது நேரம், காலம், மனநிலை முதலியவைகள் ஒத்துக் கொள்ளக்கூடிய அவகாசம் பொருந்திய நேரத்தில் அவரவரின் சிந்தனைத்திறனுக்கேற்றபடி விளங்க வைக்கக்கூடிய இலத்கியங் கள் பரவினாலொழிய பலரும் கருத்துக்களைத் தெளிவாகப்புரிந்து கொள்ளுதல் அசாத்தியம். எனவே காந்தியக் கருத்துக்களையும், பூதான, கிராமதான அம்சங்களையும் மக்களிடையே பரப்பும்

பணியை இலக்கியங்கள் வாயிலாகச்செய்ய முற்படுதல் நன்மை பயப்பதாக அமையக்கூடும்.

ஆதலால் சர்வ சேவா சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளை அங்கமான தஞ்சை சர்வோதயம் பிரசுராலயம் இப்பணியை மேற்கொண்டு செய்து வருகிறது.

பிரசுராலயத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த பிரசுர அரங்கத்தின் பல்வேறு தரப்பட்ட இலக்கியங்கள் பொதுமக்களின் கவனத்தைக் கவர்ந்திழுத்தது.

பிரசுராலய அரங்கினைத் தவிர, வீரபாண்டி கதர் கிராமக் கைத்தொழில் வித்தியாலயத்தின் சார்பிலும் இலக்கிய விற்பனைப் பகுதியொன்று நிறுவப்பெற்றிருந்தது.

சர்வோதயப் பிரசுராலய வெளியீடுகளைத் தவிர காந்தி நினைவு நிதியின் பல்வேறு வெளியீடுகளும், திருக்குறள், பரிமேலழகர் உரை போன்ற உயர்ந்த நூல்களும், இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

குழந்தைகள் முதல் ஆராய்ச்சியாளர்கள்வரை படித்துப் பயனுறத்தக்க பலப்பல நூல்கள் பெருமளவில் காட்சியில் இடம் பெற்று விற்பனையானது.

அன்பர் கருத்து :

அடிமையாக இருந்து, அன்பு என்ற விதையை விதைத்து ஆசை என்ற தண்ணீர் ஊற்றி, அறிவுக் கண்ணைத் திறந்து அனைவரையும் அறவழியில் செல்லத்தூண்டிய திறவுகோல் காந்தியடிகளின் சத்தியசோதனை மிகவும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. எல்லோரும் படித்துப் பயனடைய வேண்டியது.

—S ராமச்சந்திரன், குடந்தை.

உங்கள் சர்வோதயக் கண் காட்சியில் உள்ள புத்தக ஸ்டாலில் காந்திபற்றிய புத்தகங்கள் குறைவாக உள்ளன. சிறு குழந்தைகள் (8 முதல் 12-வயது வரை உள்ள சிறுவர்கள்) படிக்கும்படியான புத்தகங்கள் இல்லை. காந்திஜியின் வாய்மை கொல்லாமை முதலியவைபற்றிய சிறு புத்தகங்கள் குறைந்த விலையில் கிடைத்தால் என்போன்ற தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க உதவியாக இருக்கும்.

—R S சாரதா, No. 35, கர்ணக்கொல்லை அக்ரகாரம், குடந்தை.

மாதிரி கிராமக் குடிசை!

எண்ணிறந்த ஆசைகளும் அபிலாசைகளும் பெருகிவரும் மனித சமுதாயம் எதைத்கொண்டும் திருப்தியடைய முடியாத நிலையில் இருந்து வருகிறது. ஊதியப் பற்றுக்குறை, உடை பற்றுக்குறை, உண்பொருள் பற்றுக்குறை, வாழுமிடப் பற்றுக் குறை, விளை நிலம் பற்றுக்குறை, வாகனம் பற்றுக்குறை என ஒன்றையடுத்து ஒன்றாக நீண்டுகொண்டே செல்கிறது பட்டியல்!

தேவைகள் பலவிதம் :

ஆடையின்றித் திரியும் ஒரு அப்பாவி, தனக்கு உடுக்க ஒரு கந்தல் இல்லையே என்று வருந்தும் நிலையிலிருந்து ஊட்டி யில் சொந்தமாக ஒரு பங்களா வைத்துக்கொள்ள இயல வில்லையே என்று கவலைப்படுவோரின் ஆசை வரையில் எண் ணங்கள் பலதிறப்பட்டவைகளாக உள்ளன. அவரவர் தத்தம் சக்திக்குத்தக்கவாறும், அதற்கு அதிகமாகவும்பெற்றுவிட முயலு கின்றனர். எனவே மன நிம்மதியும், வாழ்வில் அமைதியும் நிலவ முடிவதில்லை,

மக்களிடையே நிலவும் இம்மாறான போக்கினைச் சற்றுத் திசைமாற்ற வேண்டுமாயின், பலவித எடுத்துக்காட்டுக்கள் மூல மாக, உதாரணங்கள், செய்முறைகள் மூலமாகவும் மட்டிலுமே சாத்தியம். எனவே சாதாரண ஒரு விவசாயி தன் குடும்பம் மற்றும் கால்நடைகள் முதலியவைகளைக் கொண்டு தனது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தியாக்கிக்கொள்ளும் வண்ணம் எளிய முறையில், தனது சௌகரியங்கள் அத்தனையும் நுகர்ந்து எவ்வாறு இன்புற்று வாழ இயலும் என்பதனை எடுத்துக்காட்டும் அம்சமே இம்“மாதிரி கிராமக் குடிசை” **(Model House)** யாகும். இது அமைக்கப்படுவதற்கு ஆகும் செலவு மிகமிகக் கொஞ்சம். இடவசதியும் குறைவாகவே போதுமானது. ஆனால் அவைகளை அமைப்பாங்கு அமைப்பதன்மூலம் சிறந்த பயன்களையும், அனு கூலங்களையும் நுகர இயலுகிறது என்பதை எடுத்துக் காட்டும் முறையில் அமைந்திருந்தது இக் குடிசை.

குடிசையின் அமைப்பு :

தென்னங்கீற்று, வைக்கோல் புல் முதலியவைகளால் வேயப்பட்ட இந்தக்குடில் $4\frac{1}{2} \times 2\frac{3}{4}$ மீட்டர் நீள அகலமுடையது. சிறிதும் பெரிதுமான இரண்டு அறைகளாகத் தடுக்கப்பட்டு உள்ளது. ஒன்றில் சமையலறை அமைக்கப்பட்டுள்ளது. இதனை யடுத்து ஒரு பிளஷ்-அவுட் கக்கூஸ் ஒன்று இணைக்கப்பட்டு

உள்ளது. சமையல் அறையில் புகையின்றியும், ஒரே வாயிலில் போடப்படும் எரிபொருளைக் கொண்டு ஒரே சமயம் 3-பாத்திரங் களிலும் உணவுப் பொருள் வேகவைக்கத் தகுந்த மகன்சூலா என்னும் அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு அறை வரவேற்பு அறை ஆகும்.

தண்ணீர் வசதி :

தண்ணீர் வசதிக்கான கிணறு ஒன்று அருகில் உள்ளது. இக்கிணறு குடும்பத்தின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய வல்லதாக இருக்கும், 75 செ. மீ. விட்டமுடையதும், $1\frac{1}{2}$-மீட்டர் ஆழமுடையதுமான இந்தக் கிணற்றில் 30 செ. மீ. தண்ணீர் இருந்தது என்றால் அது இந்த இடத்தின் (கும்பகோணத்தின்) நீர்வளத்திற்குச் சான்று என்றே கூறலாம். (வேறு இடங்களில் இன்னும் சற்று அதிகம் தோண்ட வேண்டி இருக்கலாம்.)

மாட்டுக் கொட்டம் :

அடுத்து மாட்டுக்கொட்டம் ஒன்று 10-மீட்டர் தூரத்தில் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாடுகளைக் கட்டிக் கொள்ளுவதற்குப் போதுமான இக் கொட்டத்தின் அளவு 2.5 × 1.6 மீட்டர் ஆகும். மாட்டுக் கொட்டத்தின் பக்கத்தில் மாடு தானகவே விரும்பியபொழுது தண்ணீர் குடித்துக்கொள்ள தக்க முறையில் 65 × 65 செண்டிமீட்டர் அளவுள்ள 50 செண்டி மீட்டர் ஆழமான தண்ணீர்த்தொட்டி ஒன்றும் அமைக்கப்பட்டி ருந்தது. மாட்டின் மூத்திரம் பாதுகாக்கப்பட்டு குப்பையுடன் சேருவதற்கும், சாணங்கள் சேகரிக்கப்படுவதற்கும் அங்கே வசதிகள் இருந்தன. குப்பைத் தொட்டி ஒன்று 25 மீட்டர் தொலைவில் வெட்டப்பட்டுள்ளது.

எரிவாயு உற்பத்தி : (Gas plant)

கக்கூஸ் உரத்தையும், மாட்டுச் சாணத்தையும் பயன் படுத்தி எரிவாயு தயாரிக்கும் சாதனம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. 125 செ. மீட்டர் விட்டமுடைய ஒரு குழியில் சாண மும், மலமும் செலுத்தப்படத்தக்க அமைப்புக் குழாய்கள் உள்ளன. இதன் வழியாகச் செலுத்தப்படும் பாதி தண்ணீர் கலந்த இந்த சாணம் அழுகி வாயு கிளம்புகிறது. இந்த வாயு வைப் பாதுகாத்து வைத்து வேண்டும்பொழுது தேவையான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளத் தக்க முறையில் 120 செ. மீ. விட்டமுடையதும், 120 செ. மீ. உயரமுடையதும் மேற்புறம் மூடியதுமான இரும்பு டிரம்மில் எரிவாயு சேமிக்கப்படுகிறது; மேற்புறமுள்ள அடைப்புக் குழாயினைத் திறந்து தேவையான அளவு, தேவையானபொழுது பயன்படுத்திக்கொள்ள இயலு கிறது.

இதில் தயாராகும் எரிவாயு 5-நபர்கொண்ட ஒரு குடும் பத்திற்குத் தேவையான எரி சக்தியைக் கொடுக்க வல்லது. எனவே சமையல் வேலைகளுக்குத் தேவையான விறகு வாங்க வேண்டிய அவசியமில்லை. இலவசமாகவே எரிவாயு கிடைத்து விடுகிறது.

தவிரவும் கேஸ் பிளாண்ட் மூலம் செரிக்கப்பட்டு வெளி யாகும் சாண உரம் மிக நேர்த்தியானதாகவும், செடிகளுக்கு உடனடியாகப் பயன்படக்கூடியதொரு தயார் நிலையையும்

எய்திவிடுகிறதென்பது விஞ்ஞானப் பூர்வமான உண்மையாகும் இதனுல் பொதுவாக விவசாயிகளிடம் நிலவிவரும் எண்ணமான மாட்டுக்குப்பை மறுவருடத்தில்தான் பலனளிக்கும் என்றநிலை மாறி, தேவையான பொழுது அப்போதைக்கப்போதே செடிகளுக்கு ஊட்டிப்பயனுறலாம்.

கேஸ் பிளாண்டின்மூலம் வெளியாகும் சாணக் குழம்பு நேராகச் சென்று குப்பைத்தொட்டியிலேயே விழுமாறு ஏற்பாடு செய்யப்படுவதால் கம்போஸ்டர் உரம் தயாரிக்கக்கூடிய பணியும்தானே உருவாகிறது.

காய்கறித் தோட்டம் :

வீட்டின் அருகில் ஒரு சிறிய காய்கறித் தோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்த வேண்டியே வீட்டின் அருகில் $3 \times 4\frac{1}{2}$ மீட்டர் அளவுள்ள சிறியதொரு காய்கறித் தோட்டமும் அமைக்கப்பட்டுள்ளது. வீட்டில் புழங்கும் தண்ணீர், கழிவு நீர் ஆகியவைகளைக்கொண்டே செடிகள் வளருமாறு செய்தால் இன்னும் அதிகச்சிறப்புடைய அம்சமாக விளங்கும்.

இக்கருத்துக்களனைத்தையும் வலியுறுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்த இந்த "மாதிரிக்குடிசை" எளிய வாழ்வின் மகத்துவத்தினையும், தம்மிடமுள்ள பொருட்களின் பயனையும், நலனையும் பேணிக்காக்கும் விதத்தையும், அவற்றை முழுமையாக நுகரும் வழியினையும் எடுத்தியம்புவதாக அமைந்திருந்தது.

முப்பெரும் சத்தியாக்கிரக அரங்கம்!

சக்திமிக்க வலியவர்களால் எளியவர்களுக்கு ஏற்படுத்தப் படும் அநீதிகளைக் கண்டிக்கவும், ஒடுக்கவும் முறையான ஒரு ஏற்பாடு இல்லாத சமயத்தில்; படைபலத்தினால் நீதியும் நேர்மையும் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில்; காந்தியடிகள் சத்தியத்தையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டு சத்தியாக்கிரக இயக்கத்தினை ஆரம்பித்தார்.

உப்பு சத்தியாக்கிரகம் :

உப்புக்கு வரிப் போட வேண்டும் என்று ஆரம்பிக்கப் பட்ட வெள்ளையரின் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் உப்பு சத்யாக்கிரகத்தை ஆரம்பித்தார். அதன் விளைவாக தண்டியாத் திரையை மேற்கொண்டார்.

தென்னகத்தில் ராஜாஜி அவர்களின் தலைமையில் வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரக இயக்கம் நடத்தப்பட்டது. வெள்ளையர்களின் ஆட்சியையே ஸ்தம்பிக்கச் செய்த இந்த உணர்ச்சிமிக்க போராட்டம் மாபெரும் வெற்றிபெற்றது.

சம்பாரன் போராட்டம் :

அடுத்து சம்பாரன் அவுரித்தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து, சத்தியாக்கிரகம் தொடர்ந்தார் காந்தியடிகள். பாடுபட்டு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு விளைச்சலில் 20-ல் 3 பங்கு மட்டுமே வழங்கப் பட்டது; மீதி 17 பங்கு எவ்வித உழைப்பும் செய்யாத முதலாளிகளுக்கே கிடைத்து வந்தது. இந்தப் பயங்கர அநீதியை எதிர்த்துத்தான் காந்தியடிகள் சம்பாரன் சத்தியாக்கிரகத்தை நடத்தினார்.

18-நாள் வேலை நிறுத்தத்தையடுத்து உண்ணாவிரதமும் ஆரம்பித்துவிட்டார் காந்தியடிகள். கட்டுக்கு மீறிய நிலைகண்ட தோட்ட முதலாளிகள் காந்தியடிகளின் நியாயமான கோரிக்

கையை ஏற்றுக் கொண்டார்கள். எனவே 3-நாட்களில் தமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். தோட்ட முதலாளி கள் உட்பட அனைவருக்கும் வெற்றி பெற்ற பூரிப்பு அங்கே நில வியது. சத்தியாக்கிரகத்தின் மகிமை அங்கே பிரதிபலித்தது!

வைக்கம் சத்தியாக்கிரகம் :

அடுத்தது தீண்டாமைப் பேயை எதிர்த்துக் காந்தியடி கள் தொடுத்த அறப்போராகும். ஜாதி இந்துக்கள் என்று கருதப் படும் ஒரு வகையருக்கள் மட்டுமே ஆண்டவன் சன்னதிக்குட் செல்லுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். பிற இனத்தவர் அனு மதிக்கப்படுவது இல்லை என்ற அநீதியை எதிர்த்து 1924-25ல் காந்தியடிகள் 'வைக்கம்' போராட்டத்தை ஆரம்பித்தார், ஒன்றரை ஆண்டு இடைவிடாத சத்தியாக்கிரகத்தின் பயனாக கோயில் ரஸ்தாக்களில் ஹரிஜனங்கள் போகும் உரிமை வழங்கப் பட்டது. 1937-ல் நடந்த ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கும் அதுவே அடிகோலியது.

இந்த மூன்று பெரிய சத்தியாக்கிரக் காட்சிகளைச் சித்தரிக்கும் விதத்திலும், இன்றைய இளைஞர் சமுதாயம் புரிந்து கொள்ள வசதியாகவும் அமைக்கப்பட்டிருந்த இக்காட்சிகள் காண்போரின் கருத்தையும், கவனத்தையும் ஈர்ப்பனவாக அமைந்திருந்தன. இக்காட்சிகளைக் கண்ட மக்கள் தாமும் சத்தி யாக்கிரகத் தொண்டர்களாகமாறி உணர்ச்சிப் பரவசப்பட்டனர் என்று கூறினால்மிகையல்ல.

அண்ணல் காந்தியடிகளின் உருக்கமான சொற்களும், நெஞ்சுருக்கும் செயல்களும் காண்போரை நெகிழவைக்கும் சக்திவாய்ந்தன என்பதை ஒவ்வொருவரும் உணர வாய்ப்பளிக் கும் விதத்தில் இக்கலையரங்கம் காட்சியளித்தது. இக்கலையரங் கத்தினைக் கண்டுகளித்த எத்தனையோ பொதுமக்கள் தத்தம் எண்ணிறந்த கருத்துக்களைத் தெரிவித்தனர். அவர்களுள் நெ· 44, புனிதமேரி தெரு, சென்னையைச் சேர்ந்த திருவாளர் **T. R.** விஸ்வநாதன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"மகாத்மாவின் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் கண்முன் நிறுத்திக் கடைசியில் என் கண்களைக் கலங்கவைத்து இனிக் காந்திய வழியில் செல்லத் தூண்டிய சர்வோதயப் பொருட் காட்சிக் குழுவினருக்கு என் உளங்கனிந்த நன்றி."

காந்தியடிகளின் குறள்வழி வாழ்க்கை மண்டபம்

தேசப்பிதா காந்தியடிகள் தமது வாழ்க்கையையே ஒரு சத்திய சோதனையாகக் கருதி நடத்தி வந்தார். தமிழ் மறையாகிய திருக்குறளில் வள்ளுவர் காட்டிச்சென்ற **"சான்றோர்"** வாழ்க்கையையே காந்தியடிகள் நடத்தினார் என்பதற்குச்சான்றுகள் தேடிப்பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் காந்தியடிகள் எதனைச் செய்தாரோ அது வள்ளுவர் காட்டிச் சென்ற வழியாகவே இருந்தது.

"அன்பிலார் எல்லாம் தமக்குறியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

—என்னும் பொய்யா மொழிக்கு இலக்கணமாக விளங்கினார். கொடுமைப்படுத்திய அன்னியர்களிடத்தும் அன்புசெலுத்தினார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

—என்னும் தமிழ்மறைக்கு இலக்கணமாக காந்தியடிகள் தம்மைச் சிறையில் அடைத்துத் துன்பப்படுத்திய **'ஸ்மட்ஸ்'** என்னும் ஆங்கில அதிகாரிக்கு அண்ணல் தாமாகவேசெய்த செருப்பு ஒன்றைப் பரிசளித்தார் என்று காண்கிறோம்.

உப்பு சத்தியாக்கிரகத்தின்போது நாட்டு மக்களுக்காகத் தனது துன்பத்தையும் பொருட்படுத்தவில்லை அவர். எனவே தெய்வம் அவருக்குத் துணைநின்று வெற்றி வாகை சூட்டியது.

இதனையே வள்ளுவர்

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத்தான் முந்துறும்" —என்று கூறினார்.

மேலும் கூறுகையில்:

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்" —என்றார் வள்ளுவர்.



அதற்கேற்ப காந்தியடிகள் தமது வேலைத் திட்டத்தில் உழைப்பிற்கு முதலிடம் கொடுத்தார். தான் ஒரு சிறந்த

உழைப்பாளியாக மாறினார். சுயதேவைப் பூர்த்திக்கும், விவசாயத்திற்கும் பிரதான இடமளித்தார் காந்தியடிகள்! எனவே இவைகளை அனைவரும் அறியும் விதத்தில் அவரது வாழ்வின் ஒவ்வொரு சம்பவங்களும்; அதற்கு இலக்கணமாக வுள்ள குறளையும்; அவரது வாழ்வில் அதற்குள்ள தொடர்பையும் விளக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட இக் குறள்வழி வாழ்க்கை மண்டபம் அனைவரின் கருத்தையும், கவனத்தையும் கவர்ந்ததில் வியப்பில்லை. பலரது பாராட்டுதலைப்பெற்ற இந்த அரங்கத்தைப் பற்றிய சில சான்றோரது கருத்துக்களை இங்கு தருதல் பொருத்த மானதாக அமையும்.

"வெறும் பகட்டு இல்லாமல் உள்ளத்திற்கு ஒளிதரக் கூடிய இக்கண்காட்சி உண்மையிலேயே மிகவும் பயனுள்ள ஒன்றாகும். முக்கியமாக அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கைக் குறிப்புக்களை புகைப்படத்தின் மூலம் விளக்கியவிதம் உள்ளம் உருக்கும் ஒன்றாகும்".

—G. மலைச்சாமி, டவுன் ஹைஸ்கூல், குடந்தை

"வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதை அறிந்தேன். காந்தியுடன் உறவாடிய உணர்ச்சியைப் பெற்றேன்".

—சு. நாரரயணசாமி B. A., அரசினர் கலைக்கல்லூரி, குடந்தை.

பெங்களூர் காதிபவன்

அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கமிசனின் சார்பில் பாரதமெங்கும் உள்ள பெரிய நகரங்களில் காதிபவன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள. இவைகள் அத்தாட்சிபெற்ற கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்யும் அங்கங்களாக இயங்கி வருகின்றன.



இவ்வாறான பவன்களுள் பெங்களூரில் உள்ள காதி பவனின் சார்பில் ஆயத்த ஆடைகள் விற்பனை ஸ்டால் ஒன்றும் கண்காட்சியில் இடம்பெற்றது. இதில் குடும்பத்தவர் அனைவரும் ஏககாலத்தில் வந்து தத்தமக்குத் தேவையான எல்லா உடைகளையும், தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தக்கமுறையில் அத்துணை அம்சங்களும் இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்

இவ்வாருன பல்வேறு ஸ்டால்களைத் தவிர, பொருட்காட்சியைக் காணவருவோரின் புத்துணர்ச்சியையும், சலிப்பையும் போக்க உதவும் வகையில் பட்டாணி ஸ்டால் இரண்டும், கரும்புச்சார் பிழிந்து நல்கும் அரங்கம் ஒன்றும், சத்தான பால் உணவு வழங்கத்தக்க பால்கோவா ஸ்டால் ஒன்றும் கண்காட்சியில் இடம்பெற்றன.

அத்துடன் தமிழ்நாடு சர்வோதய சங்கம், காந்திநகரில் உள்ள சாய அச்சுப்பகுதியின்மூலம் கதர்த்துணியில் "ஸ்கிரீன் பிரிண்டிங்" செய்முறை விளக்கிக் காண்பிக்கப்பட்டது.

இத்தனைக்கும் மேலாக கண்காட்சியைக் காணவரும் மக்களின் அபிமானத்தைப் பெறும் வகையில் கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. கலையரங்கில் ஒவ்வொரு நாளும் மாலை 6-முதல் இரவு 10-மணிவரை தொடர்ந்த நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன,

★ ★ ★

சர்வோதயப் பாத்திரம்

அறஞ் செய விரும்பு என்பது ஔவையின் ஆத்திச்சூடி. ஆநாம் ஏவாள் தொட்டு ஐன்ஸ்டீன்வரை அனைவரும் அறத்தினை உயர்வாகக் கருதினார்கள். மதங்களும், மதத்தின் சாரங்களும், அறத்தைப் போற்றின. மதத் தலைவர்களும் அறத்தை மதித்து வந்துள்ளார்கள்.

எனவே திருவள்ளுவர் :

“அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை”—என்றார்.

இளமைப் பிராயத்திலேயே செய்யவேண்டிய அறத்தைச் செய்யத் தவறக்கூடாது என்பதனை இதன்மூலம் வலியுறுத்துகிறார் அவர்.

தற்காலச் சிறார்கள் பள்ளியில் படிப்பிற்காகச் செலவழிப்பது சிறிது நேரமே. மீதி பெரும்பாலான நேரத்தினைத் தமது தாய் தந்தையர், உறவினர் ஆகியவர்களுடனேயே கழிக்கின்றனர். அவர்களது சிந்தனைகளும், பிரச்னைகளும் பெரும்பாலும் பணம் சம்பாதிப்பது எப்படி? குறுக்கு வழியில் பொருளீட்டுவது எப்படி என்பதிலேயே செல்லுகிறது. இன்னும் சொல்லப் போனால் நாசுக்கான முறையில் சிறுவர்களே கருவிகளாகவும் பயன்படுத்தப்படுகிறார்கள்.

ஏனவே அம்மாதிரியான சிறுவர், சிறுமியர்களது பிஞ்சு உள்ளங்களில் படிவதெல்லாம் குறுக்கு வழியில் இன்னும் வேகமாக எப்படிச் செல்லலாம்? எப்படிப் பொருளீட்டலாம்? என்னும் எண்ணங்களே! இதனை இன்னும் ஊக்குவிப்பதற்கு இன்றையத் திரைப் படங்களும் உதவியாக நிற்கின்றன.

எனவே அறம், அறச்செயல், அறவழி முதலியவைகள் பற்றிய அறிமுகமே இல்லாத நிலையில் அவர்களுடைய மனதில் அறம்பற்றிய உணர்வுகள் எப்படித்திளைக்கமுடியும்? இதன் பிரதி பலிப்பாகவே இன்றைய ஆசிரியர்—மாணவர் உறவுநிலை நிலவு கிறது. ஆசிரியர்களைத் தங்களது வழிகாட்டிகளாக ஏற்றுக் கொள்ளாமல் சினிமா நட்சத்திரங்களையே தங்களது வழிகாட்டி களாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனவே நடை, உடை, போக்கு முதலியவைகள் மாறுபடுகின்றன.



ஆதலால் இந்த நாட்டின் வருங்காலப் பிரஜைகளின் மனதில் அறத்தின் திரு உருவை நிலைநாட்டவேண்டும் என்றால் சர்வோதயப் பாத்திரத்தினை வீடு வீடாகப் பரப்ப வேண்டும் என்று விநோபா அடிகள் வலியுறுத்துகிறார்கள்.

தினமும் சமையல் செய்யுமுன் ஒருபிடி அரிசியை சர்வோதயப் பாத்திரத்தில் குழந்தைகளின் கையினால் போடும் படி செய்வதால் அறச் சிந்தனை வளரும். குழந்தைகளின் போக்கு மாறும்; சமுதாய உணர்வு ஏற்படும்; அடுத்தவர்களைப் பற்றி எண்ணும் தன்மை உதயமாகும். எனவே அரிசி சேகரிப் பது இதன் நோக்கம் அல்ல, மனித உள்ளங்களில் மாற்றம் ஏற்படச் செய்ய வேண்டும்.

எனவே சர்வோதயப் பாத்திரம் வைத்திருப்போர் எல்லோரும் உலக அமைதியினை விரும்பும் கோட்பாட்டுக்கு இசைவு தெரிவித்தவர்கள் ஆவார்கள். மெல்லமெல்ல நடைபெற்றாலும் உரமும், உறுதியும் கொண்ட நிலையான அமைதியை; அன்பு, அறம் இவற்றை மதிக்கும் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தும் முயற்சியின் முதற்படி இது. இவ்வாறு அகத்தூய்மையும், புறத்தூய்மையும் செறிந்துள்ள புதிய சமுதாயத்தை, சர்வோதய சமுதாயத்தை உருவாக்கும் ஒரு அம்சம்தான் சர்வோதயப் பாத்திரம். இதன் மூலமாகச்சேரும் அரிசியை சமுதாய நலக்காரியங்களுக்கும், சாந்திசேனை இயக்கங்களுக்கும், உலக அமைதிப் பணிக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கண்காட்சிக் கலையரங்கில் திருச்சி மாவட்ட சர்வோதய சங்கத்தின்மூலம் விளக்க அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டு சர்வோதயப் பாத்திரத்தின் முக்கியத்துவம், கொள்கைகள் முதலியவை விளக்கிக் கூறப்பட்டது.

மக்கள் மதிப்பீட்டிற்சில......

கண்காட்சியா இது......?

"பக்கம் பக்கமாகப் பல புத்தகங்களைப் படித்தாலும் அறிந்துகொள்ள முடியாத அநேக விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது இந்த சர்வோதயக் கண்காட்சி· உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி எண்ணற்ற கோடி மக்கள் ஏங்கித் திரியும்பொழுது, அயல்நாட்டு அலங்காரச்சரக்குகளை அள்ளிக் குவித்து, ஆடம்பர ஆட்டம் போடும் ஊதாரிகளுக்குத்தரும் சாட்டை அடியாகும் இது".

—மா. இராமலிங்கம், அ. வ. சீனிவாசன், சிதம்பரம்.

"ஏற்றமிகு இந்த சர்வோதயக் கண்காட்சியைக் காணும் வாய்ப்புப்பெற்றபோது அமைதி காண முடிகிறது. அண்ணல் காந்தியின் நினைவு நெஞ்சில் முழுமையாகத் தென்படுகிறது... அகிம்சையைக் காண முடிகிறது... ஏழை நாட்டில் வாழும் நாம் உழைக்க வேண்டும் என்ற உண்மையை ஒவ்வொருவருக்கும் உணர்த்துகிறது".

—நாகை மு. வேணு, மாவட்ட வேளாண்மை அலுவலகம், நாகை.

"மகாமகம் திருவிழாவுக்கு வருவதனால் என்ன புண்ணியம் கிடைக்குமோ தெரியவில்லை. ஆனால் சர்வோதயப் பொருட்காட்சியால் எனக்கு நிறைந்த பயன் கிடைத்திருக்கிறது".

—X. திருஞானசம்பந்தன், குறிச்சி-குடந்தை.

"நான் கண்ட சர்வோதயக் கண்காட்சி என்னைத் தீவிர காந்தியவாதியாக மாற்றிவிட்டது"

—M சந்திராதேவி, திருத்துறைப்பூண்டி.

"குடந்தை மகாமக விழாவின் பயன் சர்வோதய இயக்கத்தினரால் நடத்தப்படும் பொருட்காட்சியில்தான் இருக்கிறது. பாரதத்தின் தலைமகன் அண்ணல் காந்தியடிகளின் புனித வரலாற்றை, தற்போதைய சந்ததியினர் மறந்து வருகின்ற நிகழ்ச்சி நாட்டின் பல்வேறு சம்பவங்கள் மூலம் அறிகிறோம்.

இந்த துயரமிக்க நேரத்தில் கடந்த காலத்தையும், நாம்பெற்ற சுதந்திரத்தையும் பாதுகாக்கும் நினைப்பைத் தூண்டுகிறது. இப் பொருட்காட்சி தேவையான நேரத்தில், தேவையான இடத்தில் நடத்தப்படும் பாடமாகும்".

—இவண்
சுப வீரமணி, இன்னம்பூர்.

"The Sarvodaya Exhibition Stalls at Kumbakonam during the great Mahamagam 1968 are not only intensed for entertainment but are highly enlightening. Much is to be learnt for one and all. The Organisers have taken great pains and they are amply rewarded as we learn a lot about the various activities under taken by the Sarvodaya Workers. In particular the cowdung Gas Plant, Pith Works and Sarvodaya Family are much appreciated by us. We wish all success as we can do nothing more for the Sarvodaya movement.

—V. SESHADRI B. A, B T,
—R. VISWANATHAN B. SC., B. E. D.
Banadura High School, Kumbakonam

"சர்வோதயக் கண்காட்சியைப் பார்த்ததிலேயே என்னை மிகவும் கவர்ந்தது காந்திஜியின் வாழ்க்கையே. அதை அடுக் கடுக்காக வைத்திருந்தது மிகவும் தெளிவாகப் பார்த்து ரசிக்கும் படியே இருந்தது. கண்ணீரிடையே கண்ட காட்சி கண் கொள்ளாக் காட்சி"

—P. அண்ணாவி, சதர்ன் ரோட்வேஸ், பெரியகுளம், மதுரை மாவட்டம்.

★ ★

... PUBLIC LIBRARY
1 MAY 1969

பிழை திருத்தம்

பக்கம்.	பாரா.	வரி.	பிழை	திருத்தம்
27.	3-வது.	7-வது.	விருகிருன்.	வருகிருன்.
29.	3 ,,	1 ,,	தமிழரித்திடம்.	தமிழரிடம்.
36.	1 ,,	3 ,,	ஹங்கர்.	ஹஸ்கர்.
37.	3 ,,	5 ,,	முறையிஃனயே	முறையிஃனயும்.
39.	1 ,,	2 ,,	அமைக்கூடிய.	சமைக்ககூடிய.
40.	2 ,,	4 ,,	நிலக்கறி.	நிலக்கரி.
44.	4 ,,	2 ,,	வாய்ந்தாதலால்.	வாய்ந்தது ஆதலால்
57.	1 ,,	3 ,,	முன்னவைகளிவிடச் -	முன்னவைகளைவிடச்
57.	1 ,,	4 ,,	சுற்றுக்கூடுதலாக-	சற்றுக்கூடுதலாக
77.	1 ,,	10 ,,	இலத்தியங்கள்.	இலக்கியங்கள்.
88.	1 ,,	3 ,,	ஏற்படுத்தப்பட்டுள்ள-	ஏற்படுத்தப்பட்டுள்ளன.